# மில்கோ (தனி) நிறுவனம்

இல. 45, நாவல வீதி, நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

# வருடாந்த அறிக்கை 2021




## எமது தொலைநோக்கு

"இலங்கையில் "தரத்தில் சிறந்த" போ'ாக்கு உணவு மற்றும் குடிபான நிறுவனமாக "மில்கோ" விளங்குதல்"

## எமது செயற்பணி

உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்களை சக்திமிக்கவர்களாக்கி, பால் உற்பத்தியில் இலக்குப்படுத்தப்பட்ட வளர்ச்சியைச் சாதிப்பதில் தொழிற்பாடு சார்புடைய பங்காளராக விளங்குதல். கட்டுப்படியான விலைகளில் எமது பெறுமதிமிக்க பாவனையாளர்களுக்கு வழங்குவதற்காக போ'ாக்கு நிறைந்த குடிபான பதப்படுத்தலில் தொடர்ச்சியான மேம்படுத்தல் முன்னெடுப்புக்களுடன் ஆதரவளிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்தை பிரயோகித்தல்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனம்சார் தகவல்கள் | 1 |
| பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்க விபரம் | 2-3 |
| தலைவரின் செய்தி | 4 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 5-6 |
| செயலாற்றுகையின் சிறப்பம்சங்கள் | 7-8 |
| தாபனம்சார் நிர்வாகம் | 9-10 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 11-12 |
| நிதி நிலைமை கூற்று | 13 |
| விரிவான வருமான அறிக்கை | 14 |
| உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று | 15 |
| காசுப் பாய்வுக் கூற்று | 16-17 |
| நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் | 18-52 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 53-64 |
| நிதியியல் சிறப்பம்சங்கல் | 65 |

| | |
|---|---|
| *நிறுவனத்தின் பெயர்* | *- மில்கோ பிறைவட் லிமிடெட்* |
| *சட்ட நிலை* | *- 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு, 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு தனியார் பொறுப்பு கம்பனி.* |
| *பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* | *- இல.45, நாவல வீதி, நாரஹேன்பிட, கொழும்பு 05.*<br>*- தொ. பே. 0112586174, 0114500541*<br>*- தொலைநகல்: 0112368082/ 0112577540/0114500555*<br>*- இணையம்: [www.milco.lk](http://www.milco.lk)*<br>*- மின்னஞ்சல்: [info@milco.lk](mailto:info@milco.lk)* |
| *தொழிற்சாலைகள் -* | *கொழும்பு பால் தொழிற்சாலை (CMF)*<br>*அம்பேவல விசிறி உலர்த்தும் பால்மா தொழிற்சாலை (SDMF)*<br>*திகன பால் தொழிற்சாலை (DMF)*<br>*பொலன்னறுவை கெட்டிப் பால் தொழிற்சாலை (PMF)* |
| *கூட்டிணைக்கப்பட்ட திகதி* | *- 1996 மே 09* |
| *மீள் பதிவு செய்யப்பட்ட திகதி* | *- 2008 மே 19* |
| *நிறுவனத்தின் பதிவு இலக்கம்* | *- N (PVS) 17159 (பழையது)*<br>*-PV 2942 (புதியது)* |
| *கம்பனி செயலாளர்கள்* | *- பைனான்சியல் சேர்விசஸ் அன் கொம்மேர்சியல் ஏஜன்சீஸ் பிறைவட் லிமிடெட். இல. 300/3, நாவல வீதி, நாவல* |
| *பணிப்பாளர்கள் -* | *திரு. லசந்த விக்கிரமசிங்க - தலைவர்*<br>*திரு. யு.எம்.இந்திக அபேவிக்ரம - பணிப்பாளர்*<br>*திரு. சஞ்சீவ குணவர்தன – பணிப்பாளர்*<br>*திரு. எச். விஜித குமார – பணிப்பாளர்*<br>*திரு எச்.அந்தோனிகே அமரசேன - பணிப்பாளர்*<br>*திரு. எச்.எம். முதுபண்டா ஹேரத் - பணிப்பாளர்*<br>*திரு. ஜீ.ஏ. அருண பிரசன்ன – பணிப்பாளர்*<br>*திரு. ஜீ.எஸ்.எம். கெலும் குணதிலக - பணிப்பாளர்* |
| *கணக்காய்வாளர்கள்-* | *- உள்ளக கணக்காய்வு*<br>*ஏர்னஸ்ட் அன் யங் கன்சல்டிங் சேர்விசங் பிறைவட் லிமிடெட்*<br><br>*-வெளி - அரசாங்க கணக்காய்வாளர்*<br>*கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்* |
| *வங்கியாளர்கள் -* | *மக்கள் வங்கி ,*<br>*இலங்கை வங்கி* |

**திரு. லசந்த விக்ரமசிங்க**

*திரு. லசந்த விக்ரமசிங்க கணினி மென்பொருள் துறையில் வலுவான பின்னணியைக் கொண்ட ஒரு அனுபவம் வாய்ந்த தகவல் தொழிநுட்ப நிபுணர் மற்றும் அனுபவம் வாய்ந்த வணிக அமைப்புகள் பகுப்பாய்வாளர் ஆவார். அவர் தேவைகள் பகுப்பாய்வு, ERP தீர்வுகளின் செயற்பாட்டு வடிவமைப்பு மற்றும் மென்பொருள் அபிவிருத்தி ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் வரி அறிக்கையிடலில் அவரது நிபுணத்துவம் பெற்று விளங்குவதுடன், உலகளாவிய ERP முறைமைக்கான செயற்பாடுகள், பொருட் போக்குவரத்து கணக்கீடுகள், விலை நிர்ணயம் மற்றும் வரி முகாமைத்துவம் உள்ளிட்ட முக்கியமான செயற்பாடுகளை வடிவமைப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.*

*அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விசேட கணிதப் பிரிவில் இளமானிப் பட்டத்தையும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி முகாமைத்துவத்தில் இரண்டு முதுமானிப் பட்டங்களையும் பெற்றுள்ளார்*

**திரு. எஸ். டபிள்யூ. குணவர்தன**

*திரு. எஸ். டபிள்யூ. குணவர்தன கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமானிப் பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் வணிக நிர்வாகத்துறையில் முதமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.*

*இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள முன்னணி வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றியுள்ள இவர், தற்போது E B Creasy குழுமம் மற்றும் Laxapana Batteries PLC ஆகியவற்றின் பணிப்பாளர் சபையில் பணியாற்றுகிறார்.*

**திரு. யு. எம். ஐ. அபேவிக்ரம**

*பிரித்தானிய கணினி சங்கத்தின் பட்டய கணினி பொறியியலாளரான திரு. உஷான் இந்திக, கோஸ்டாரிகாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டம் பெற்றுள்ளார். தனியார் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.*

**திரு. எஸ். ஹேமந்த விஜித குமார**

*திரு. ஹேமந்த விஜித குமார களனி பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் துறையில் பட்டம் பெற்றவர். களனி பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளமானிப் பட்டமும், ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ள இவர் தற்போது அபிவிருத்தி நிதித் துறையின் பணிப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.*

**திரு. எச்.எம்.எம். பண்டார ஹேரத்**

*திரு. ஹேரத், காணி மீட்புக் கூட்டுத்தாபனத்தின் பதில் பணிப்பாளர், ரிமார்க் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், doodu international (PVT.) Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், சுகததாச விளையாட்டரங்கு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்து வருகிறார்.* **திரு. ஜி.எஸ்.எம் .கெலும் குணதிலக்க**

*திரு. குணதிலக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். அவர் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் (ITN) செய்தி தயாரிப்பாளராகவும், பல அரசாங்க அமைச்சுகளில் ஊடக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.*

**திரு. ஜி. ஏ. அருண பிரசன்ன**

*திரு. பிரசன்ன நிர்வாகம், ஜனநாயகம் மற்றும் பொதுக் கொள்கையில் உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர். அவர் AMR Distribution (Pvt.) Ltd நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், IDAPZ (Pvt.) Ltd நிறுவனத்தின் விற்பனை முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார்.*

**திரு. எச். ஏ. அமரசேன**

*கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பட்டதாரியான திரு. எச். ஏ. அமரசேன சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆவார். அவர் தற்போது சட்டத்துறையில் செயற்திறமாக ஈடுபட்டவருகிறார்.*

| தொ. இல | | பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | திரு. | எம்.ஏ.எஸ். முனசிங்க | பொது முகாமையாளர் - நிர்வாகம் |
| 2 | திரு. | பீ.ஐ.ஓ.பெர்னாண்டோ | பொது முகாமையாளர் - கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் - ஓய்வு 05.08.2021 |
| 3 | திரு. | எச்.எம்.யூ.ஹேரத் | முகாமையாளர் |
| 4 | திரு. | நாலக டி சில்வா | முகாமையாளர்- தொழிநுட்ப புத்தாக்கம் |
| 5 | திரு. | எச்.எம்.டபிள்யு. ராஜபக்ஷ | முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிர்வாகம் / திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு |
| 6 | திரு. | எம்.ஜீ.பீ. பிரேமதிலக | முகாமையாளர் - நிதி |
| 7 | திரு. | டீ.எம். அவ்வார்ட் | பிரதிப் பொது முகாமையாளர் - பண்ணை அபிவிருத்தி, பால்கொள்வனவு |
| 8 | திரு. | டி.எம்.எம். திஸாநாயக்க | முகாமையாளர்- பண்ணை அபிவிருத்தி, பால்கொள்வனவு - ஓய்வு 02.09.2021 |
| 9 | திரும | பீ.கே.யூ.பீ.ரொட்ரிகோ | முகாமையாளர் - சட்டம் |
| 10 | திரு. | பிரதீப் சேனாதீர | முகாமையாளர் - கருத்திட்டங்கள் மற்றும் பொறியியல் |
| 11 | திரு. | எஸ். சரவணபவன் | முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை |
| 12 | திரு. | எம்.பீ.கே. ஜயரத்ன | முகாமையாளர் - தர உறுதி மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |
| 13 | திரு. | டபிள்யு. என். உபனந்த | முகாமையாளர் -களஞ்சியங்கள் -ஓய்வு 20.11.2021 |
| 14 | திரு. | எம்.ஜீ.பீ. ஜயரத்ன | முகாமையாளர் - போக்குவரத்து |
| 15 | திரு. | ஜீ.ஏ.பீ.ஜே. உதயகுமார | தொழிற்சாலை முகாமையாளர் |
| 16 | திரு. | பீ.எல்.கே. லால் குரே | பதில் தொழிற்சாலை முகாமையாளர் |
| 17 | திரு. | ஜீ.வை.ஜீ. சமன் | பதில் தொழிற்சாலை முகாமையாளர் |
| 18 | திரு. | டபிள்யு. பி. விஜேதிலக | தொழிற்சாலை முகாமையாளர் |

# தலைவரின் வாழ்த்துச் செய்தி

*மில்கோ (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் 2021 ஆண்டு அறிக்கைக்கான இந்தச் செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தற்போதைய உலகளாவிய தொற்றுநோயின் தாக்கம் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதார அழுத்தங்கள் இலங்கை பண்ணை கைத்தொழில் துறைக்கான உற்பத்தி செலவுகள் மற்றும் சந்தை இயக்கவியலை குறிப்பாகப் பாதித்த நிலையில் கடந்த ஆண்டு சவாலானதாக காணப்பட்டது.*

*இந்தத் தடைகளுக்கு மத்தியிலும், உள்ளூர் பண்ணை விவசாயிகளை வலுப்படுத்துதல் மற்றும் எங்கள் நம்பகமான ஹைலண்ட் தரச்சின்னத்தின் கீழ் போசாக்கு நிறைந்த, தரமான பால் பொருட்களை வழங்குவது என்ற எங்கள் அடிப்படை செயற்பணியில் மில்கோ நிறுவனம் உறுதியாக இருந்தது. அதிகரித்து வரும் செலவுகளை நிர்வகிக்க செயற்பாட்டு வினைத் திறன் மற்றும் கவனமான நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் நாங்கள் கவனம் செலுத்தியதுடன், இந்தக் கடினமான சூழ்நிலைகளில் இலாபத்தை பேண முடிந்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.*

*எங்கள் செயற்பாடுகளின் முதுகெலும்பாக விளங்கும் எங்கள் பண்ணை விவசாயிகளுக்கான எங்கள் அர்ப்பணிப்பில் ஒருபோதும் குறைவேற்படவில்லை. நாங்கள் வலுவான பால் சேகரிப்பு முயற்சிகளைத் தொடர்ந்ததோடு, நாடு முழுவதும் அத்தியாவசிய பால் பொருட்களின் நிலையான கிடைக்கும் தன்மையை உறுதி செய்தோம். திரவ பால் முதல் பட்டர், சீஸ் மற்றும் தயிர் வரை எங்கள் பரந்த அளவிலான தயாரிப்புகளையும் நாங்கள் பேணிவந்தோம், இவை அனைத்தும் எமது ஹைலண்ட் தரச்சின்னத்தை பெருமையுடன் சுமந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.*

*எதிர்காலத்தைப் பொறுத்தவரை, குறிப்பாக பால் சேகரிப்பு மற்றும் இலாபத்தை மேம்படுத்துதல் தொடர்பாக முன்னேற்றத்திற்கான பகுதிகளை நாங்கள் அங்கீகரிக்கிறோம். எங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை திறன்களை மேம்படுத்தவும், எங்கள் விவசாயிகளின் கூட்டாண்மைகளை வலுப்படுத்தவும் நாங்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகிறோம். இலங்கையின் பால் தன்னிறைவுக்கு பங்களிக்கும் எங்கள் நீண்டகால தொலைநோக்கு எங்கள் வழிகாட்டும் கொள்கையாக உள்ளது.*

*எங்கள் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் மீளாற்றல், எங்கள் விசுவாசமான பண்ணை விவசாயிகளின் விலைமதிப்பற்ற பங்களிப்புகள், எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் நல்வாழ்வில் மில்கோ நிறுவனத்தின் முக்கிய பங்கில் நம்பிக்கையுடனும், புதுப்பிக்கப்பட்ட உறுதியுடனும் எதிர்காலத்திற்கு முகம்கொடுப்போம்..*

**எல்.பி. விக்ரமசிங்க**
**தலைவர்**

*மில்கோ பிறைவெட் லிமிடெட்டின் பணிப்பாளர்கள், 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள்.*

***பிரதான பணி***

*பசும் பால் சேகரிப்பு, பதப்படுத்துதல், பொதியிடுதல், பால் பொருட்களை விநியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவை இந்த ஆண்டில் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளாகும்*

***ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி***

*நிறுவனத்தின் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிக்கு ஆண்டில் செய்யப்பட்ட சேர்த்தல்கள் ரூபாய் 226.20 மில்லியன் மற்றும் மேலதிக விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 03இல் காட்டப்பட்டுள்ளன.*

***பணிப்பாளர் சபை***

*பின்வரும் பணிப்பாளர்கள் சபை 2021.01.01 முதல் தொடர்ந்திருக்கின்றனர்*

*திரு. லசந்த விக்கிரமசிங்க - தலைவர்*
*திரு. உஷான் மதுஷ இந்திக அபேவிக்ரம– பணிப்பாளர்*
*திரு. சஞ்சீவ குணவர்தன – பணிப்பாளர்*
*திரு. ஹேமந்த விஜித குமார – பணிப்பாளர்*
*திரு. ஹேவா அந்தோனிகே அமரசேன – பணிப்பாளர்*
*திரு. எச்.எம். முதுபண்டா ஹேரத் - பணிப்பாளர்*
*திரு. ஜீ.ஏ. அருண பிரசன்ன – பணிப்பாளர்*
*திரு. ஜீ.எஸ்.எம். கெலும் குணதிலக - பணிப்பாளர்*

*இந்த ஆண்டில் பணிப்பாளர் சபைக்கான பின்வரும் நியமனங்கள் பதவி விலகல்கள் இடம்பெற்றன*

*திரு. எச்.எம். முதுபண்டா ஹேரத் 2021.01.06 ஆந் திகதி நியமிக்கப்பட்டார்*
*திரு. ஜீ.ஏ. அருண பிரசன்ன 2021.01.06 ஆந் திகதி நியமிக்கப்பட்டார்*
*திரு. ஜீ.எஸ்.எம். கெலும் குணதிலக 2021.07.19 ஆந் திகதி நியமிக்கப்பட்டார்*

***பங்குகள் பற்றிய தகவல்***

*மீளாய்வு ஆண்டு முழுவதும், கம்பனியின் வெளிப்படுத்திய மூலதனத்தின் அளவு மற்றும் பெறுமானம் ரூ. 319,454,060ஆகும்.*

***ஒதுக்கங்கள்***

*முன்கொண்டுவரப்பட்ட திரண்ட நட்டம் ரூ.28,787,324/= கணக்குகளின் பக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, வரிக்குப் பிந்திய நடப்பு ஆண்டு இலாபமான 333,024,779/= இற்கு சரி செய்யப்பட்டது. 2021 கணக்குகள் 2022 கணக்குகளுடன் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு நட்டம் ரூபாய் 1,809,192,200/= ஆகும்.*

*ஒதுக்கங்களில் மூலதன கையிருப்பு ரூ. 25,000,000/= மற்றும் வருட இறுதியில் ரூ. 1,689,978/= கடனடைப்பு நிதி ஆகியவை அடங்கும்.*

***ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு***

1

நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிறுவனத்துடன் எந்த ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை.

**தாபனம் சார் நிர்வாகம்**

பணிப்பாளர் சபை சிறந்த தாபன நிருவாகத்தை உறுதி செய்கிறது. நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் பங்குதாரர்களின் குறிக்கோள்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயலாற்றுகையை உறுதி செய்வது பணிப்பாளர் சபையின் கடமையாகும்.

**வரிவிதிப்பு**

வட்டி வருவாயில் இருந்து எழும் வருமான வரி பொறுப்பு, முன்கொண்டு வரப்பட்ட வரி இழப்புகளுக்கு எதிராக தள்ளுபடிசெய்யப்பட்டது. இந்த ஆண்டில் நிறுவனம் செயற்பாட்டு இழப்பைச் சந்தித்துள்ளதுடன், அதன் மூலம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து எந்த வரிப் பொறுப்பும் அறிக்கையிடப்படவில்லை.

**நியதிச்சட்டமுறையான செலுத்துதல்கள்**

அரசாங்கத்திற்கும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்குச் செலுத்த வேண்டிய அனைத்துவிதமான நியதிச்சட்ட முறையான கொடுப்பனவுகளும் மிகச் சரியாகவும் சரியான நேரத்திலும் செலுத்தப்பட்டதில் பணிப்பாளர்கள், தங்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு உட்பட்ட வகையில் திருப்தி அடைந்துள்ளனர்.

**அமைந்தொழுகுந்தன்மை**

இலங்கை அல்லது வேறு தேசமொன்றுடன் ஏற்புடைய சட்டங்கள் அல்லது பிரமாணங்களுக்கு முரணான நடவடிக்கைகளில் நிறுவனம் ஈடுபடவில்லை.

**நிறுவனத் தொடர்ச்சி**

**எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகளைத் தொடர நிறுவனத்திடம் போதுமான மூலங்கள் இருப்பதாக பணிப்பாளர் சபை திருப்தி அடைந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, நிறுவனத்தின் கணக்குகளைத் தயாரிப்பதில் நாங்கள் தொடர்ந்து நிறுவனத் தொடர்ச்சி எண்ணக்கருவைப் பயன்படுத்துகிறோம்.**

**கணக்காய்வாளர்கள் நியமனம்**

2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்காக கணக்காய்வாளர் நாயகம் நியமிக்கப்பட்டார். பணிப்பாளர்கள் அறிந்த வரையில், கணக்காய்வாளர்கள் தங்கள் சுதந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நிறுவனத்துடன் எந்த உறவையும் கொண்டிருக்கவில்லை.

**பணிப்பாளர் சபையின் சார்பாகவும் அவர்களுக்காகவும்**

……………………………..

**கம்பனி செயலாளர்**

பைனான்சியல் சேர்விசஸ் அன் கொம்மேர்சியல் ஏஜன்சீஸ் பிறைவட் லிமிடெட்
(RCS2000074) இல. 300/3, நாவல வீதி, நாவல

# மில்கோ (பிரைவட்) லிமிடெட் முக்கிய செயலாற்றுகைகள்







*பால் சேகரிப்பில் ஏற்பட்ட சரிவைத் தொடர்ந்து, 2019 இல் வருமானம் கணிசமாக தாக்கத்திற்குள்ளானது. இருப்பினும், 2020 மற்றும் 2021 இல் பால் சேகரிப்பு மட்டம் மற்றும் உற்பத்தி விலை ஏற்ற இறக்கங்கள் ஆகியவற்றின் சிறிய அதிகரிப்புடன் அது மீளத் தொடங்கியது.*

*2019 ஆம் ஆண்டில் பால் மா கையிருப்பின் (விற்பனை செய்யக்கூடிய நிலையில் இல்லாத) உணரக்கூடிய பெறுமதியில் ஏற்பட்ட சரிவின் காரணமாக மொத்த இலாப விகிதம் கணிசமாக பாதிக்கப்பட்டது. 2020 இல் அசாதாரணமான பரிவர்த்தனை எதுவும் பதிவாகாததால், மொத்த இலாபம் இயல்பு நிலைக்கு மீண்டுள்ளது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில், பால் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியால் மொத்த இலாபம் குறைந்தது.*







*விற்பனை செய்ய முடியாத பால் மா கையிருப்பின் மீதான கையிருப்பு மதிப்பீடு சரிசெய்தலைத் தொடர்ந்து, நிறுவனம் 2019 நிதியாண்டில் நிகர இழப்பைப் பதிவு செய்திருந்தது. இது 2020 ஆம் ஆண்டில் மீண்டு, அந்தக் காலகட்டத்திற்கு ரூ.225.76 மில்லியன் நிகர இலாபத்தைப் பதிவு செய்தது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில், பால் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியால் இலாபங்கள் குறைந்தது.*

*கடுமையான போட்டி காரணமாக, ஆண்டு சேகரிப்பு மட்டம் 2019 இல் 66 மில்லியன் லிட்டராகக் குறைந்தது, பின்னர் 2020 இல் 91 மில்லியனாக சற்று அதிகரித்தது. இருப்பினும், 2021 இல், இது மீண்டும் 68 மில்லியனாகக் குறைந்தது.*







*மீளாய்வு காலத்தில், திரவப் பால் அதிகபட்ச விற்பனை பெறுமதியாக ரூ. 3.61 பில்லியனைப் பதிவு செய்துள்ளது, இது மொத்த விற்பனையில் 29% ஆகும். யோகட் மற்றும் பால் மா விற்பனை மொத்த விற்பனையில் முறையே 25% மற்றும் 21% பங்களித்தது. இந்த மூன்று தயாரிப்புகளும் மொத்த விற்பனையில் 75% பங்கைக் கொண்டிருந்தன, மீதமுள்ள விற்பனையில் ஐஸ்கிரீம் வகைகள், பட்டர், தயிர், நெய், கெட்டிப்பால் மற்றும் சீஸ் வகைகள் இருந்தன.*







*இந்த காலகட்டத்தில் உற்பத்திக்கான பால் பயன்பாடு பற்றிய பகுப்பாய்வு மேலே காட்டப்பட்டுள்ளது. மொத்தம் 32.11 மில்லியன் லீட்டர் பால் பால் மா மற்றும் பட்டர் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது, இது மொத்த பால் சேகரிப்பில் 51% ஆகும். மேலும், 20.81 மில்லியன் லீட்டர் பால் திரவ பால் உற்பத்திக்கும், மீதமுள்ளவை யோகட் மற்றும் வேறு பொருட்கள் உற்பத்திக்கும் ஒதுக்கப்பட்டன.*

மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையினால் மாதத்திற்கு ஒருதடவை என்ற அடிப்படையில் பணிப்பளர்சபைக் கூட்டம் நடத்தப்பட்டது. நிதிக்கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகையிலும் பேணிவருகையிலும் கூட்டாண்மைத்திட்டமும் வருடாந்த வரவுசெலவுத் திட்டமும் பிரதானமான சாதனங்களாக அமைந்ததோடு நிதியாண்டின் தொடக்கத்தில் வரிசை முகாமையாளர்கள் அனைவரையும் வினவி அவை தயாரிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

மாதாந்த செயலாற்றுகை அறிக்கை முந்திய மாத அறிக்கையுடன் ஒப்புநோக்கப்படுவதோடு அடுத்தடுத்து வருகின்ற மாதாந்த கூட்டங்களின்போது வரவுசெலவுகள் கிரமமாக சமர்ப்பிக்கப்பட்டன.இந்த அறிக்கை இலக்குகள் சகிதம் நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகை பற்றிய நடப்பு அறிக்கைகளை வழங்குவதோடு கம்பெனியின் இலாபம் அல்லது நட்டம் சம்பந்தமாக பயனுறுதிமிக்க முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ள பணிப்பாளர்சபைக்கு இயலுமையை வழங்குகின்றது.

**கணக்காய்வுக் குழு**

திறைசேரியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர் கணக்காய்வுக்குழுவுக்கு தலைமை வகித்தல் வேண்டுமென்பதோடு குழு மேலும் நிறைவேற்றுத்துறையல்லாத இரண்டு பணிப்பாளர்களுடன் இயங்கியதோடு அது பணிப்பாளர்சபையின் துணைக்குழுவாக செயலாற்றி வருவதோடு மிகவும் உயர்வான சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வெளிவாரி நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு மூலமாக அதற்கு சேவை வழங்கப்படுகின்றது.

எம்/எஸ் ஏர்ன்ஸ்ற் அன்ட் யங் அட்வைசறி சேர்விசஸ் (பிரை) கம்பெனி ஆண்டில் உள்ளக கணக்காய்வாளராக செயலாற்றியது. தலைமை அலுவலகத்திற்கும் மேலதிகமாக அதன் கிளை அலுவலகங்கள் கொழும்பு, அம்பேவல, பொலொன்னறுவை மற்றும் திகண ஆகிய தொழிற்சாலைகளில் இயங்கிவருகின்றன.

உள்ளக கணக்காய்வாளர்களால் தயாரிக்கப்படுகின்ற கணக்காய்வுத்திட்டமொன்று வருடத்தின் தொடக்கத்தில் கணக்காய்வுக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதோடு இந்த திட்டத்தின் பிரகாரம் ஆண்டு பூராவிலும் உள்ளக கணக்காய்வு விவசாரணைகளும் பரிசோதிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வில் உள்ளடக்கப்படுகின்ற விபரமான அறிக்கைகள் முதலில் கருத்துக்கள் மற்றும் பிரதிபலிப்புகளுக்காக சம்பந்தப்பட்ட முகாமையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடப்படும்.இந்த கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு பொழிப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவின் மீளாய்வு மற்றும்

தொடர்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும். கணக்காய்வுக்குழுக் கூட்டம் மாதமொரு தடவை நடைபெறும்.

**நிறுவனம்சார் முகாமைத்துவம்**

தனது பங்குரிமையாளர்களுக்கு நியாயமான திட்பநுட்பத்தன்மை கொண்டதாக கம்பெனியின் நிதிநிலைமை பிரதிநித்துவப்படுத்தப் படக்கூடியவகையில் முறையான கணக்காய்வு அறிக்கைகளை கம்பெனி பேணிவருகின்றதென்பதை உறுதிசெய்ய பணிப்பாளர்சபை ஆவனசெய்கின்றது.அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பெனிகள் சட்டத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகத்தக்கதாக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

## குழுவின் சாசனம்

பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுக் குழு சாசனம், குழுவின் நோக்கம், அதிகாரம், அமைப்பு, கூட்டம் மற்றும் பொறுப்புகளை வரையறுக்கிறது.

கணக்காய்வுக் குழுவின் நோக்கம்:

1. நிதி அறிக்கையிடல் செயல்முறைக்கான அதன் ஒட்டுமொத்த பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பணிப்பாளர் சபைக்கு உதவுதல்.
2. உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ முறைமையினை மீளாய்வு செய்தல்.
3. உள்ளக கணக்காய்வு செயல்பாட்டின் செயல்திறனைக் கண்காணித்து மதிப்பீடு செய்தல்.
4. சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதைக் கண்காணிப்பதற்கான நிறுவனத்தின் செயல்முறையை மீளாய்வு செய்தல்.
5. வெளி கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மை மற்றும் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்.

## அமைப்பு

திரு.சஞ்சீவ குணவர்தன, திரு. உஷான் அபேவிக்ரம மற்றும் குழுவின் தலைவர் திரு.எஸ்.எச்.வி.குமார ஆகிய மூன்று சுயாதீன செயல் பொறுப்பற்ற பணிப்பாளர்களைக் இக்குழு கொண்டுள்ளது. கணக்காய்வுக் குழுவின் தலைவர் திறைசேரியின் பிரதிநிதியாவார். நிறுவனத்தின் செயலாளர் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகச் செயல்படுகிறார்.

குழுவின் முக்கிய செயற்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## கூட்டங்கள்

மீளாய்வு ஆண்டில் கணக்காய்வுக் குழு எட்டு முறை கூடியது. பொது முகாமையாளர், நிதி முகாமையாளர், அரசாங்க கணக்காய்வுத் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரதிநிதி, எர்ன்ஸ்ட் அன் யங் இன் கணக்காய்வு முகாமையாளர் மற்றும் மூலோபாய வணிகப் பிரிவுகளின் (SBUs) செயல்பாட்டுத் தலைவர்கள் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்குத் தேவையானதாகக் கருதப்பட்டால் அழைக்கப்பட்டனர்.

## உள்ளக கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவம்

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடு மெசர்ஸ் எர்ன்ஸ்ட் அன் யங்கிற்கு ஒப்பந்த சேவை வேண்டி ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு பலவீனங்கள் குழுவால் ஆராயப்பட்டதுடன், கணக்காய்வுப் பரிந்துரைகள் மீது முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளும் மதிப்பாய்வு செய்யப்பட்டன. குழுவானது உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளின் செயல்திறன் மற்றும் உள்ளககள் கணக்காய்வுக்கான நோக்கம் மற்றும் நடைமுறைகளை அடுத்த ஆண்டில் மதிப்பாய்வு செய்தது.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

அதன் கூட்டங்களின் போது, குழுவானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறனையும் வணிகம் மற்றும் நிதி அபாயங்களை வெளிப்படுத்துவதற்கான நிறுவனத்தின் அணுகுமுறையையும் மதிப்பாய்வு செய்தது. நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், நிதி கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் வழங்குவதிலும் நிதி அறிக்கையிடல் முறையை நம்பியிருப்பதை உறுதிசெய்வதற்கும் செயன்முறைகள் உள்ளன.

நிறுவனத்தின் SBU கள் தொடர்பான அனைத்து முக்கிய செயலாற்றுகை அளவுகோல்களை முன்னிலைப்படுத்தி ஒரு விரிவான முகாமைத்துவ அறிக்கை மற்றும் கணக்குகள் ஒவ்வொரு மாத இறுதியிலும் தயாரிக்கப்படுகின்றது. இது சிரேஷ்ட முகாமைத்துவத்தால் மாதாந்த அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. SBU சபைகள் மாதாந்த அடிப்படையில் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்கின்றன.

## நிதிக் கூற்றுக்கள்

நிறுவனத்தின் மாதாந்த நிதிக் கூற்றுக்கள், வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் அவற்றின் நம்பகத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் உட்பட பிற சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்குகின்றனவா என்பதை குழு மதிப்பாய்வு செய்தது. வெளியிடப்பட்ட நிதிநிலை

கூற்றுக்களில் வெளிப்படுத்தியதன் போதுமான தன்மையையும் குழு மதிப்பாய்வு செய்தது.

## வெளி கணக்காய்வாளர்கள்

நிறுவனத்தின் வெளி கணக்காய்வாளர்கள் நாட்டின் அரசியலமைப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகிறார்கள். வெளி கணக்காய்வு திறம்படவும் சுயாதீனமாகவும் மேற்கொள்ளப்படுவதை குழு உறுதிசெய்ததுடன், கணக்காய்வு அணுகுமுறை மற்றும் நடைமுறை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான உறவைப் பேணுகிறது.

வெளி கணக்காய்வாளர்கள், முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து விடயங்களையும் தொடர்ந்து கணக்காய்வுக் குழுவுக்குத் தெரியப்படுத்தினர். குழு கணக்காய்வாளர்களைச் சந்தித்து, கணக்காய்வு மற்றும் தேவையான போது எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளால் எழும் சிக்கல்கள் குறித்து கலந்துரையாடியது.

## முடிவுரை

நிறுவனத்தில் நிலவும் கட்டுப்பாட்டுச் சூழல், நிறுவனத்தின் நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை, சொத்துக்கள் பாதுகாக்கப்படுதல் மற்றும் மில்கோ (பிரைவேட்) லிமிடெட் நிரட்படுத்தல் விதிகளுக்கு இணங்குவது குறித்து நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதாக கணக்காய்வுக் குழு திருப்தியடைந்துள்ளது.

திரு. எஸ்.எச்.வி குமார.
கணக்காய்வுக் குழுவின் தலைவர்

# 2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்று

| சொத்துக்கள் | குறிப்பு: | 2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூ. | 2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூ. |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துகள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 2 | 5,332,387,240 | 5,630,047,816 |
| சொத்து பயன்பாட்டு உரிமை | 2.1 | 58,696,472 | 48,315,935 |
| முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி | 3 | 12,748,439,240 | 12,536,392,498 |
| நிதியியல் கருவி - கடனீட்டு செலவு | 4 | 897,013,432 | 811,519,828 |
| நீண்ட கால முற்பணங்கள் | 5 | 83,777,083 | 139,152,682 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | 19,120,313,466 | 19,165,428,759 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட் பட்டியல்கள் | 6 | 1,284,519,222 | 1,132,938,074 |
| வரத்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 7 | 932,985,740 | 1,075,106,153 |
| வருமான வரி கிடைப்பனவு | 8 | 61,932,163 | 121,164,639 |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை | 9 | 51,943,162 | 17,228,129 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | 2,331,380,287 | 2,346,436,994 |
| **மொத்த சொத்துக்கள்** | | 21,451,693,754 | 21,511,865,754 |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **குறிப்பிடப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்** | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 10 | 319,454,060 | 319,454,060 |
| மூலதன ஒதுக்கீடு | 11 | 25,000,000 | 25,000,000 |
| மீள் மதிப்பீடு ஒதுக்கீடு | | 336,454,463 | 336,454,463 |
| கடன் தீர் நிதி | 12 | 1,689,978 | 1,689,978 |
| தக்கவைத்த வருவாய் | | 333,024,779 | (28,787,324) |
| **பங்குதாரர்கள் நிதி** | | 1,015,623,279 | 653,811,177 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பிற்போட்ட வரி பொறுப்பு | 13 | - | - |
| வட்டியில்லா தாங்கு கடன்கள் | 14.2 | 2,108,063 | 2,108,063 |
| வட்டி தாங்கும் கடன்கள் - நீண்ட காலம் | 14.1 | 18,558,163,698 | 18,449,096,221 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் - பணிக்கொடை | 15 | 587,470,655 | 841,552,796 |
| பிற்போட்ட வருமானம் - அரசாங்க மானியம் | 16 | 113,902,491 | 20,081,884 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | 19,261,644,907 | 19,312,838,963 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 17 | 914,918,069 | 775,475,909 |
| வட்டி தாங்கும் கடன்கள் - குறுகிய காலம் | 14.1 | 31,762,332 | 96,110,896 |
| வங்கி மேலதிகப்பற்றுக்கள் | 18 | 227,745,167 | 673,628,809 |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | | 1,174,425,567 | 1,545,215,614 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | 21,451,693,754 | 21,511,865,754 |

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் குறைப்புகளைக் காட்டுகின்றன

*06 முதல் 35 பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகுட*

*2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க இந்த நிதிநிலைமை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் உறுதிப்படுத்துகிறேன்.*

......................................

**எம்.ஜீ.பீ. பிரேமதிலக**
**முகாமையாளர் - நிதி**

*இந்த நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.*

*2024.02.12 ஆந் திகதி சபையின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது*

......................................

**பீ.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி**
**தலைவர்**

......................................

**கெலும் குணதிலக்க**
**பணிப்பாளர்**

| | குறிப்பு: | 2021 டிசம்பர்31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது ரூ. | 2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 19 | 12,476,320,252 | 11,104,710,548 |
| விற்பனை செலவு | | (11,292,970,296) | (9,703,560,044) |
| **மொத்த இலாபம்** | | 1,183,349,956 | 1,401,150,505 |
| ஏனைய செயற்படுத்தல் வருமானம் | 20 | 75,153,207 | 33,475,777 |
| | | 1,258,503,163 | 1,434,626,282 |
| நிர்வாக செலவு | | (825,937,229) | (798,515,146) |
| விநியோக செலவுகள் | | (427,630,386) | (336,890,593) |
| எனைய செலவுகள் | | (7,552,976) | (6,696,851) |
| **செயற்பாடுகளில் இருந்து இலாபம் (நட்டம்)** | | (2,617,427) | 292,523,692 |
| நிதி வருமானம் | 21 | 66,109,595 | 52,972,581 |
| நிதிச் செலவுகள் | 22 | (29,167,006) | (119,739,982) |
| **வரிக்கு முந்திய நிகர இலாபம்** | | 34,325,163 | 225,756,290 |
| வருமான வரி செலவு | 23 | - | - |
| **வரிக்கு பிந்திய ஆண்டிற்கான நிகர இலாபம்** | | 34,325,163 | 225,756,290 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| இலாபம் அல்லது நட்டம் என மறுவகைப்படுத்தப்படாத பொருள்: | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டத்தின் மறுமதிப்பீடு, நிகர வரிகள் | | 327,486,940 | (109,295,614) |
| **ஏனைய மொத்த விரிவான நிகர வரி வருமானம்** | | 327,486,940 | (109,295,614) |
| **மொத்த விரிவான வருமானம்** | | 361,812,103 | 116,460,676 |
| ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் | 24 | 11.33 | 3.65 |

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் குறைப்புகளைக் காட்டுகின்றன

*06 முதல் 35 பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.*

| | குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூ. | மூலதனம் ஒதுக்கீடு ரூ. | மீள்மதிப்பீடு ஒதுக்கீடு ரூ. | கடனடைப்பு நிதி ரூ. | நிறுத்திவைத்த வருமானம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| ***2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி*** | *319,454,060* | *25,000,000* | *336,454,463* | *1,689,978* | *(145,248,000)* | *537,350,500* |
| *ஆண்டுக்கான நிகர இலாபம்* | - | - | - | - | *116,460,676* | *116,460,676* |
| *ஏனைய விரிவான வருமானம்* | - | - | - | - | - | - |
| ***2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி*** | *319,454,060* | *25,000,000* | *336,454,463* | *1,689,978* | *(28,787,324)* | *653,811,176* |
| *ஆண்டுக்கான நிகர இலாபம்* | | | | | *34,325,163* | *34,325,163* |
| *ஏனைய விரிவான வருமானம்* | | | | | *327,486,940* | *327,486,940* |
| ***2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி*** | *319,454,060* | *25,000,000* | *336,454,463* | *1,689,978* | *333,024,779* | *1,015,623,279* |

*அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் குறைப்புகளைக் காட்டுகின்றன*

*06 முதல் 35 பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.*

| இயக்க நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல் | 2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூ. | 2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூ. |
|---|---|---|
| வரிக்கு முந்திய நிகர இலாபம் | 34,325,163 | 225,756,290 |
| சரிசெய்தல்கள் | | |
| சொத்து ஆலை மற்றும் உபகரணம் மீதான தேய்வு | 517,715,524 | 521,879,592 |
| முதலீட்டில் இருந்து வருமானம் | (59,041,321) | (52,972,581) |
| வட்டி செலவு | 27,581,235 | 115,771,068 |
| குத்தகை வட்டி | 1,787,690 | 3,968,828 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியங்கள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட வருமானம் | (12,311,892) | (8,998,110) |
| பரிமாற்ற இலாபம் | (47,507,169) | (14,127,003) |
| வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களுக்கான ஏற்பாடு - பணிக்கொடை | 108,782,100 | 116,410,264 |
| கைதீர்ப்பு வருமானம் | 11,778 | (28,367) |
| ESC பதிவழிப்பு | - | 91,350,074 |
| முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி பதிவழிப்பு | 542,273 | - |
| சொத்து பயன்பாட்டு உரிமை கடன்தீர்நிதி மூலமாகக் கடன் குறைத்தல் | 13,051,662 | 13,321,663 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | 584,937,043 | 1,012,331,717 |
| பொருட்பட்டியல்களில்(அதிகரிப்பு) /குறைப்பு | (151,581,149) | (39,807,244) |
| வரத்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகளில் (அதிகரிப்பு) /குறைப்பு | 201,352,889 | 108,094,364 |
| வரத்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) /குறைப்பு | 139,442,160 | 13,388,626 |
| **செயற்பாடுகளில் இருந்து பெறப்படும் பணம்** | 774,150,943 | 1,094,007,463 |
| செலுத்தப்பட்ட வட்டி | (27,581,235) | (115,771,068) |
| வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களுக்கான கொடுப்பனவு - பணிக்கொடை | (35,377,300) | (35,718,123) |
| **செயற்படுத்தல் நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ இருந்து நிகர காசு** | 711,192,408 | 942,518,272 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்து ஆலை மற்றும் உபகரணம் கையகப்படுத்தல் | (120,071,821) | (58,157,140) |
| நிர்மாணத் துறையில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களில் முதலீடுகள் | (174,512,496) | (29,828,724) |
| சொத்துக்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் | 4,475 | 51,353 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 59,041,321 | 52,972,581 |
| புதிய/ (திரும்பப் பெறுதல்) குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீடு (நிகர) | (37,986,434) | (9,696,683) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு** | (273,524,956) | (44,658,613) |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| செலுத்தப்பட்ட குத்தகை வாடகை | (11,242,021) | (23,426,318) |
| நீண்ட கால கடன்கள் மூலம் கிடைக்கும் வருமானம் | 140,839,733 | - |
| கடன்களின் மீள் கொடுப்பனவு | (86,666,488) | (142,810,673) |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு** | 42,931,224 | (166,236,990) |
| **பணம் மற்றும் பணத்திற்கு சமமானவையில் நிகர அதிகரிப்பு** | 480,598,676 | 731,622,669 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை (குறிப்பு அ)** | (656,400,681) | (1,388,023,349) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை (குறிப்பு அ)** | (175,802,005) | (656,400,681) |

| | 2021<br>டிசம்பர் 31இல்<br>உள்ளவாறு<br>ரூ. | 2020<br>டிசம்பர் 31இல்<br>உள்ளவாறு<br>ரூ. |
|---|---|---|
| **குறிப்பு அ : ஆண்டின் ஆரம்பத்தில்** | | |
| வங்கிகளில் உள்ள மீதி | 12,456,380 | 7,989,149 |
| கையில் உள்ள சில்லறைத் தொகை | 4,771,749 | 4,825,402 |
| | 17,228,129 | 12,814,551 |
| வங்கி மேலதிகப்பற்று | (673,628,809) | (1,400,837,901) |
| | (656,400,681) | (1,388,023,350) |
| **குறிப்பு அ; ஆண்டின் இறுதியில்** | | |
| வங்கிகளில் உள்ள மீதிகள் | 10,895,767 | 12,456,380 |
| அழைப்பு வைப்புகள் | 40,000,000 | - |
| கையில் உள்ள சில்லறைத் தொகை | 1,047,394 | 4,771,749 |
| | 51,943,162 | 17,228,129 |
| வங்கி மேலதிகப்பற்று | (227,745,167) | (673,628,809) |
| | (175,802,005) | (656,400,681) |

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் குறைப்புகளைக் காட்டுகின்றன

06 முதல் 35 பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

## 1.1. கூட்டுறவு தகவல்கள்

### 1.1.1 சட்ட மற்றும் வதியுநர் தன்மை

*வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் வதிவிடத்தைக் கொண்டதுமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட ஒரு கம்பனியாகும்.*

*இந்தக் கம்பனி 1996 மே 09 ஆம் திகதி "வரையறுக்கப்பட்ட இலங்கை கிரியா பால் கைத்தொழில் (தனியார்) கம்பனி" என்ற பெயரின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. இந்தக் கம்பனியின பெயர் 2001 ஜூலை 23 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 'வரையறுக்கப்பட்ட மில்கோ' (தனியார்) கம்பனி' என மாற்றப்பட்டது. இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய பால் அபிவிருத்திச் சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட இலங்கை பால் உற்பத்திச் சபைக்கு 1998 பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் சொந்தமாக இருந்த மற்றும் அக்கம்பனி பயன்படுத்திய (காணிகள் தவிர) அனைத்து சொத்துக்களினதும் பொறிகளினதும் உபகரணங்களினதும் உரிமையும் வரையறுக்கப்பட்ட இலங்கை பால் உற்பத்தி (தனியார்) கம்பனியினால் அதுவரையில் பயன்படுதப்பட்டுவந்த காணிகளினதும் கட்டடங்களினதும் குத்தகை உரிமை 1998 பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் கம்பனிக்கு மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு மாற்றப்பட்ட சொத்துக்களின் தேறிய பெறுமதி 306,500,020 ரூபாவாகும். மேலும், 2000 ஆகஸ்ட் 08 ஆம் திகதியில் இலங்கை அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கடிதத்தின் அடிப்படையில் குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணிகளினதும் கட்டடங்களினதும் வருடாந்த குத்தகை வாடகையான 20,427,900/- ரூபா கூட்டிணைந்த வியாபாரமாக மாற்றும் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க கைவிடப்பட்டது.*

*கம்பனியின் பதிவு செய்த அலுவலகம் இல. 45, நாவலை வீதி, கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ளதுடன், பிரதான வியாபாரச் செயற்பாடுகள் அங்கிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. கம்பனியின் பிரதான தொழிற்சாலை நாராஹேன்பிட்டை, அம்பேவலை, திகனை, பொலனறுவை ஆகிய இடங்களில் அமைந்துள்ளதுடன், 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் படல்கமை தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.*

### 1.1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

*பால் சேகரித்தல், பதனிடுதல், பொதி செய்தல், விநியோகித்தல், பால் மூலமான உற்பத்திகளை விற்பனை செய்தல் என்பனவே இவ்வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.*

### 1.1.3 வெளியிடுதவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

*2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2024.02.12 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் முன்மொழிவுக்கு இணங்க வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது..*

### 1.1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

*இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தலுடன் தொடர்பான பொறுப்புக்கள் பணிப்பாளர் சபைக்குரியதாகும்.*

## 1.2. பிரதான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### *1.2.1* பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

#### *1.2.1.1* நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலுக்கான அடிப்படை

*இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு (SLFRS/LKAS) இணக்கமான முறையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.*

#### *1.2.1.2* அளவீட்டு அடிப்படை

***SLFRS** / LKAS மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்ட சில சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தவிர இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.*

#### *1.2.1.3* தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

*உரிய நிறுவனம் தொழிற்படும் அடிப்படைப் பொருளாதாரச் சூழலின் பயன்பாட்டிலுள்ள நாணயத்தைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள விடயங்கள் அளவிடப்படுகின்றன (தொழிற்பாட்டு நாணயம்). கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயமான இலங்கை ரூபாவில் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**1.2.1.4 இணக்கப்பாட்டுக் கூற்று**

*2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (நிதிக் கூற்றுக்கள்) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு (LKAS/ SLFRS) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.*

**1.2.1.5 நிறுவனத் தொடர்ச்சி**

*தொடர்ச்சியாக இயங்குவதற்கு கம்பனியிடம் காணப்படும் ஆற்றல்கள் தொடர்பில் கம்பனியின் பணிப்பாளர்களால் மதிப்பீடு செய்து கிட்டிய எதிர்காலத்தினுள் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான வளங்கள் கம்பனியிடம் காணப்படுவதாகத் திருப்தியடைந்தனர். மேலும் கம்பனியின் தொடர்ச்சியான இருப்புக்கான ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க அளவு சந்தேகங்களை ஏற்படுத்தும் நிச்சயமற்ற தன்மைகள் எதனை முகாமைத்துவத்தினால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதனால் தொடர்ச்சியான இருப்பை அடிப்படையாகக் கொண்டு இனிமேலும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.*

**1.2.1.6 ஒப்பீட்டு ரீதியான தகல்கள்**

*கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியினால் மாற்றமின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அக்கொள்கைகள் கடந்த ஆண்டின் கொள்கைகளுக்கு இணக்கமாகக் காணப்படுகின்றன. தேவையான போது கடந்த ஆண்டின் பெறுமானங்களும் வாசகங்களும் நடப்பு வருடத்தில் சமர்ப்பித்தலுக்கு/ வகைப்படுத்தலுக்குப் பொருத்தமான முறையில் மீளத் தயாரிக்கப்பட்டுள்ளன.*

**1.2.1.7 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்**

*வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும், கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட திகதிகளில் காணப்பட்ட செலாவணி விகிதங்களில் அறிக்கைப்படுத்தல் நாணய அலகான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுகின்றன.*

*வெளிநாட்டுச் செலாவணியில் பெறுமதிகள் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வருட இறுதியில் காணப்படும் வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுவதுடன் அதன் விளைவாக ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

*பணமல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகளை உறுதிப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட செலாவணி விகிதத்தைப் பயன்படுத்த மாற்றப்படுகின்றன. அதன் காரணமாக ஏற்படும் இலாபங்களும் நட்டங்களும் விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

**1.2.1.8 பொருண்மையும் திரட்சியும்**

*ஒவ்வொரு விடயத்தினதும் பொருள் வகையும் நிதிக் கூற்றுக்களில் தனியாகக் காட்டப்பட்டுள்ளன. வித்தியாசமான தன்மையைக் கொண்ட அல்லது தொழிற்பாடுகளின் அடிப்படையில் வித்தியாசமான விடயங்கள், பொருட்கள் அல்லாத விடத்து தனித் தனியாகக் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**1.2.1.9 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள்**

***a) தீர்மானங்கள்***

*இந்த கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில், மதிப்பீடுகளைத் தவிர, தீர்மானங்களையும் எடுத்ததுடன் அவை நிதிக் கூற்றுக்களில் அடையாளம் காணப்பட்டுள்ள தொகைகளில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.*

***b) மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்***

*கம்பனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள வருமானம், செலவுகள், சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் அளவுகள் மற்றும் அறிக்கையிடல் திகதியில் நிகழ்தகு பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் முகாமைப்படுத்தப்படுதல் அவசியமானதாகும்.*

அடுத்துவரும் நிதியாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முன்கொண்டுசெல்லல் பெறுமானங்களில் போதியளவிலான சீராக்கல்களை மேற்கொள்ள நேரிடுகின்ற கணிசமான இடர்களைக்கொண்ட நிதிநிலைமைத் திகதிக்கு மதிப்பீட்டு ஐயப்பாட்டின் எதிர்காலம் மற்றும் ஏனைய முக்கியமான தோற்றுவாய்களுடன் தொடர்புடைய முக்கியமான ஊகங்கள் கவனத்திற்குட்படுத்தப்பட்டுள்ளன.

### *1.3* சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படைகளும்

### *1.3.1* சொத்துகள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

***a)* அளவீடுகள்**

*அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன ஆரம்பத்தில் செலவுகளின் அடிப்படையில் பதியப்படும். பின்னர் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள்கணிக்கும் போது அச்சொத்துக்கள் சேரும் மொத்த விடய வகுப்பு மீள்கணிக்கப்படும்.*

*நாளாந்த சேவைச் செலவுகள், குறைவான திரட்டிய பெறுமானத் தேய்வுகள் மற்றும் பெறுமதியில் திரட்டிய சேதங்கள் தவிர்ந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் செலவு அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அடையாளம் காணப்படுவதற்கான அளவுகோள்கள் பூர்த்தி செய்யப்படுமாயின் அச்செலவில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் பகுதிகளை மாற்றுவதற்காகச் செய்யப்படும் செலவுகளும் அடங்கும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதிகள் காலத்துக் காலம் மாற்றப்பட வேண்டுமாயின், கம்பனி அத்தகைய பாகங்களை விசேட பயனுள்ள ஆயுட் காலத்தைக் கொண்ட தனியான சொத்துக்களாகக் கருதி அதனடிப்படையில் அந்தப் பொருளுக்கான பெறுமானத் தேய்வுகளை மேற்கொள்ளும்.*

*முக்கியமான சோதனைகள் மேற்கொள்ளப்படும் போது, அடையாளம் காண்பதற்கான அளவுகோள்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், அவற்றின் செலவுகள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மாற்றுதல் என்று கொண்டு செல்லும் பெறுமதியில் அடையாளம் காணப்படும். மற்ற அனைத்து பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் இலாபம் அல்லது நட்டம் என அங்கீகரிக்கப்படுகின்றன.*

*ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட் காலம் சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றில் ஏதேனும் ஒன்றை அகற்றும் போது அல்லது அதனைப் பயன்படுத்துவதனால் அல்லது அகற்றுவதனால் எதிர்காலத்தில் எந்தவொரு பொருளாதாரப் பயனும் எதிர்பார்க்கப்படாத போது அப்பொருள் அங்கீகரிக்கப்படுவதில்லை. சொத்தை அங்கீகரிப்பதில் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் (நிகர அகற்றல் வருமானத்திற்கும் சொத்தை எடுத்துச் செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக கணக்கிடப்பட்ட) அந்த சொத்து அங்கீகாரம் நீக்கப்பட்ட ஆண்டில் விரிவான வருமான அறிக்கையில் உள்ளடக்கப்படுகிறது.*

***b)* சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களின் பயனுள்ள ஆயுட் காலம்**

*ஒவ்வோர் அறிக்கையிடல் தினத்திலும் சொத்துக்களின் மீதிப்பெறுமானம், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைகள் என்பன கம்பனியால் மீளாய்வு செய்யப்படுகின்றன. இந்த பெறுமானங்கள், விகிதங்கள் மற்றும் முறைகளை மதிப்பீடு செய்கையில் தொழில்சார் நிபுணர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க முகாமைத்துவத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள நடைமுறைப்படுத்தப்படுகின்றன.*

***c)* பெறுமானத்தேய்வு**

*ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட் காலம் முழுவதிலும் எளிய நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தின் அல்லது நட்டத்தின் பெறுமானத்தேய்வு அடையாளம் காணப்படுவதுடன் அவ்வாறு செய்யப்படுவதற்குக் காரணம் சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்காலப் பொருளாதாரப் பயன்களைப் பயன்படுத்த எதிர்பார்க்கும் முறையை மிகவும் நுணுக்கமாகப் பிரதிபலிக்கின்றமையாகும்.*

*நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், அவற்றின் குத்தகைக் காலப் பகுதி அல்லது அதன் பயனுள்ள ஆயுட் காலம் ஆகிய இரண்டில் குறைவான காலப் பகுதியின் அடிப்படையிலேயே பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.*

*பயனுள்ள ஆயுட் காலம் பின்வருமாறு அமையும்:*

| | |
|---|---|
| *கட்டிடங்கள்* | *20 தொடக்கம் 25 வருடங்கள் வரை* |
| *ஆலை மற்றும் இயந்திராதிகள்* | *04 தொடக்கம் 30 வருடங்கள் வரை* |

| | |
|---|---|
| தளபாடம் மற்றும் பொருத்துதல்கள் | 05 வருடங்கள் |
| ஆய்வுகூட உபகரணம் | 05 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 வருடங்கள் |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| போத்தல்கள் மற்றும் கூடைகள் | 04 வருடங்கள் |
| கணனிகள் | 04 வருடங்கள் |
| போத்தல் குளிரேற்றிகள் | 04 வருடங்கள் |
| மென்பொருட்கள் | 03 வருடங்கள் |
| பால் கேன்கள் | 05 வருடங்கள் |

சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அவை பயன்படுத்த முடியுமான சந்தர்ப்பத்திலிருந்து ஆரம்பிப்பதுடன், அச்சொத்துக்களை விற்பனைக்காக வகைப்படுத்திய திகதி அல்லது சொத்தை அகற்றும் திகதி ஆகிய இரண்டில் முதலில் வரும் திகதியில் பெறுமானத் தேய்வு நிறுத்தப்படும்.

**d) மீளமைத்தல் செலவுகள்**

ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகைத் தரநியமங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதாரப் பயன்களை மீளமைப்பதற்காக அல்லது பேணி வருவதற்கான ஆதனங்களின், பொறித் தொகுதிகளின், உபகரணங்களின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக்காகச் செய்யப்படும் செலவுகள்.

**e) கடன்பெறுகைச் செலவுகள்**

நேரடியாக ஏதேனும் எதிர்பார்க்கப்படும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக குறிப்பிட்டதொரு காலத்தை எடுக்கும் தகைமை கொண்ட சொத்து ஒன்றை கையகப்படுத்துவதற்கு, நிர்மாணம் அல்லது உற்பத்தி தொடர்பான கடன் பெறுகைச் செலவுகள், குறித்த சொத்தின் செலவுகளின் ஒரு பகுதியாக ஆக்கப்படும். ஏனைய அனைத்துக் கடன்பெறுகைச் செலவுகளும் அவை ஏற்பட்ட காலப் பகுதியில் செலவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

**f) ஐந்தொகையில் இருந்து நீக்கம்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட் காலம் சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றில் ஏதேனும் ஒன்றை அகற்றும் போது அல்லது அதனைப் பயன்படுத்துவதனால் அல்லது அகற்றுவதனால் எதிர்காலத்தில் எந்தவொரு பொருளாதாரப் பயனும் எதிர்பார்க்கப்படாத போது அப்பொருள் அங்கீகரிக்கப்படுவதில்லை. சொத்து ஐந்தொகையில் இருந்து நீக்கப்படுவதால் ஏற்படும் எந்த இலாபம் அல்லது நட்டமும் நிகர அகற்றல் வருமானத்திற்கும் சுமந்து செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக கணக்கிடப்பட்டு, விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகிறது.

### 1.3.2 அருவச் சொத்துக்கள்

தனித்தனியாக கையகப்படுத்தப்பட்ட கட்புலனாகாச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின் அடிப்படையில் செலவில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர் கட்புலனாகாச் சொத்துக்களின் செலவுகள் திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய சேத நட்டம் என்பவற்றைக் கழித்து முன்கொண்டு செல்லப்படும்

மட்டுப்படுத்தப்பட்ட ஆயுட் காலம் கொண்ட கட்புலனாகாச் சொத்துக்கள் பயனுள்ள பொருளாதார ஆயுட் காலத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வுக்கு உட்படுத்தப்படுவதோடு கட்புலனாகாச் சொத்துக்கள் பலவீனமடைய முடியும் என்று எச்சரிக்கப்படும் சந்தர்ப்பத்திலும் சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பயனுறுதிவாய்ந்த ஆயுட் காலத்தைக் கொண்ட கட்புலனாகாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வுக் காலமும் பெறுமானத் தேய்வு முறையும் ஆகக் குறைந்து ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படும்.

சொத்துக்களில் காணப்படும் எதிர்பார்க்கப்படும் பயனுறுதிவாய்ந்த ஆயுட் காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறை, பெறுமானத் தேய்வுக் காலப் பகுதியை அல்லது முறையைப் பொருத்தமான முறையில் மாற்றியமைப்பதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாகக் காட்டப்படும். கட்புலனாகாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வுச் செலவு, கட்புலனாகாச் சொத்துக்களின் தொழிற்பாட்டுக்கு இணங்க செலவு வகையின் இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று மூலம் அடையாளம் காணப்படும்.

### 1.3.3 SLFRS 16ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு உரிமை சொத்துக்கள்

**a) பயன்பாட்டு உரிமை சொத்துக்கள்**

அடிப்படைச் சொத்து பயன்பாட்டிற்குக் கிடைக்கும்போது, பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களை நிறுவனம் அங்கீகரிக்கிறது. பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் செலவில் அளவிடப்படுகின்றன,

*திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் குறைபாடு இழப்புகள் குறைக்கப்பட்டு, குத்தகைப் பொறுப்புகளின் மறு-அளவீட்டுக்கு சரிசெய்யப்படுகின்றன. பயன்பாட்டு உரிமைச் சொத்துகளின் செலவானது, அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புகளின் அளவு, ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் தொடக்கத் திகதியில் அல்லது அதற்கு முன் செய்யப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கும். குத்தகைக் காலத்தின் முடிவில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் உரிமையைப் பெறுவதில் குழு நியாயமான முறையில் உறுதியாக இல்லாவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை அல்லது குத்தகைக் காலத்தின் குறுகிய காலத்தில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும். பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் பாதிப்புக்கு உட்பட்டவை.*

*ஒரு நிதி குத்தகைக்கு வழிவகுக்கும் ஒரு விற்பனை மற்றும் குத்தகைப் பரிவர்த்தனையைப் பொறுத்தமட்டில், சொத்துக்களின் எடுத்துச் செல்லும் அளவுக்கு அதிகமான விற்பனை வருமானங்களின் எந்தவொரு மேலதிகமான பகுதியும் , அது குத்தகைக் காலத்தில் ஒத்திவைக்கப்படுவதுடன், கடன்தீர்க்கப்படும்*

***b) குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியுடைய சொத்துக்கள்***

*ஆரம்ப திகதியிலிருந்து 12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குத்தகைக் காலத்தைக் கொண்ட குத்தகைகளுக்குக் குழு குறுகிய கால குத்தகை அங்கீகார விலக்கைப் பயன்படுத்துகிறது. இது குறுகிய கால குத்தகைகளில் குறைந்த பெறுமதியுடைய சொத்துக்கள் அங்கீகாரம் விலக்கு குத்தகை செலுத்துதல் குத்தகைக்கு ஏற்புடையதாகும் என்பதுடன், குறைந்த பெறுமதியுடைய சொத்துகளின் குத்தகைகள் குத்தகை காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.*

***1.3.4 நிதியல்லாச் சொத்துக்களின் வலுக்குன்றல்***

*ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் திகதியிலும் ஏதேனும் சொத்துக்கள் வலுக்குறையும் அபாயங்கள் உள்ளனவா என்று உறுதியாக அறிந்து கொள்வதற்காக கம்பனியினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய வலுக்குன்றல் பண்புகள் காணப்படுமிடத்து அல்லது சொத்துக்களுக்கான வருடாந்த வலுக்குன்றலை சோதனையிடும் போது தேவையானவிடத்து, கம்பனி சொத்தின் மீள அறவிட முடியுமான பெறுமதியை மதிப்பீடு செய்யும். ஒரு சொத்தின் மீள அறவிட முடியுமான பெறுமதி என்பது ஏனைய சொத்துக்களிலிருந்து அல்லது சொத்து வகைகளிலிருந்து பெரிதும் புறம்பாக, அந்தச் சொத்து காசுப் பாய்ச்சலை மேற்கொள்ளாதிருப்பின், குறித்த சொத்தின் அல்லது காசு உழைக்கும் அலகின் விற்பனைக்குச் செலவாகும் செலவையும் பயன்பாட்டுப் பெறுமதியையும் கழித்துப் பெறப்பட்ட நியாயமான பெறுமதியாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி, அதன் மீள அறவிடத்தக்க பெறுமதியை விஞ்சுகின்ற போது சொத்து வலுக்குன்றியிருப்பதாகக் கருதப்படுவதுடன் அதன் மீள அறவிடத்தக்க பெறுமதி கைவிடப்படும். பயன்பாட்டில் காணப்படும் பெறுமதியை மதிப்பிடும் போது பணத்தின் காலப் பெறுமதியும் சொத்துக்கான குறிப்பான அபாயங்களின் தற்போதைய சந்தை மதிப்பீட்டை பிரதிபலிக்கும் விதத்தில் வரிக்கு முன்னரான வழி விலைக் கழிவு வீதத்தைப் பயன்படுத்தி மதிப்பிடப்படட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல் நிகழ்காலப் பெறுமதிக்கு குறைக்கப்படும்.*

*தொடர்ச்சியான தொழிற்பாடுகளின் வலுக்குன்றலானது, விரிவான வருமானக் கூற்றில் வலுக்குன்றிய சொத்துக்களின் தொழிற்பாடுகளுக்கு இசைவான செலவு வகைகளில் காட்டப்படும்.*

*நற்பெயரைத் தவிர சொத்துக்கள் தொடர்பில் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் மூலம் முன்னர் அடையாளம் காணப்பட்ட வலுக்குன்றல் நட்டங்கள் தொடர்ந்தும் காணப்படவில்லையா என்றும் அவை குறைக்கப்பட்டுள்ளனவா என்றும் அவதானிக்கப்பட்டுள்ளதா என்று ஆராயப்படும். சொத்துக்களில் அத்தகைய அவதானிப்புக்கள் இருப்பின், மீண்டும் கம்பனி அதனை அறவிடத்தக்க மதிப்பீட்டுக்கு உட்படுத்தும்.*

*இறுதியான வலுக்குன்றல் இழப்பு அடையாளம் காணப்பட்டதிலிருந்து சொத்துக்களின் மீள அறவிடப்பட வேண்டிய தொகைகளைத் தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மதிப்பிடுகளில் மாற்றமொன்று நிகழ்ந்திருந்தால் மாத்திரமே, முன்னர் அடையாளம் காணப்பட்ட வலுக்குன்றல் நட்டமானது மாற்றியமைக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், சொத்தின் முன்கொண்டு செல்லப்பட்ட தொகைகள் மீள அறவிடப்பட வேண்டிய தொகைக்கு அதிகரிக்கப்படும். அதிகரிக்கப்படும் தொகையானது முன்கொண்டு செல்லப்பட்ட, தேறிய பெறுமானத் தேய்வில் காணப்பட்ட, முன்னைய வருடங்களில் வலுக்குன்றல் இழப்புகள் அடையாளம் காணப்படாத பெறுமதியை ''மிஞ்சியதாக' அமைய முடியாது. அத்தகைய மீட்டமைத்தல்கள் முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.*

***1.3.5 முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி***

*நடைபெற்று வரும் மூலதன வேலைகள், குறிப்பிட்ட சொத்து முதன் முதலாகப் பயன்படுத்தப்படும் போது அச்சொத்தின் கணக்கிற்கு மாற்றப்படும்.*

விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சி வரை வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள். இந்த வகைப்படுத்தலானது குறித்த நிதிச் சொத்துக்கள் பெறப்பட்ட நோக்கங்களைப் பொறுத்து மாற்றமடையக் கூடியவையாகும். நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை அவற்றின் ஆரம்ப அடையாளம் காணலின் போது முகாமைத்துவம் தீர்மானிக்கும் என்பதுடன், ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அந்த வகைப்படுத்தலை மீள் மதிப்பீடு செய்யும்.

*1.3.6.1* **ஆரம்ப அடையாளம் காணல் மற்றும் அளவீடு**

தனது நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல், ஆரம்ப அடையாளம் காணலின் போது கம்பனியினால் தீர்மானிக்கப்படும். அனைத்து நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அடையாளம ் காணப்படும், சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சந்தைப் பெறுமதியில் இல்லாதவிடத்து, நேரடியாகச் சேரவேண்டிய கொடுக்கல் வாங்கல் செலவுகளும் சேர்க்கப்படும்.

சந்தையிலுள்ள ஒழுங்குபடுத்தலினால் அல்லது சமவாயத்தினால் நிறுவப்பட்ட ஒரு காலப் பகுதிக்குள் வழங்கப்பட வேண்டிய நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனை, வர்த்தகத் திகதியில், அதாவது கம்பனி குறிப்பிட்ட சொத்த கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அர்ப ்பணிக்கின்ற திகதியில் அடையாளம் காணப்படும்.

கம்பனியின் நிதிச் சொத்துக்களில் காசு, நிலையான வைப்புக்களிலுள்ள முதலீடுகள், வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள் என்பன உள்ளடங்கும்.

*1.3.6.2* **பின்தொடர் அளவீடுகள்**

நிதி ஆதனங்கள் தொடர் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலைப் பொறுத்து பின்வருமாறு அமையும்:

*(a)* **இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களும் ஆரம்ப அடையாளம் காணலின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயமான பெறுதியிலுள்ளவையாகத் தீர்மானிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் என்பன உள்ளடங்கும். நிதிச் சொத்துக்கள், விற்பனை நோக்கத்திற்காக அல்லது கிட்டிய காலத்தில் மீள் கொள்வனவிற்காக கையகப்படுத்தப்பட்டிருந்தால் அவை வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவை என்று அடையாளம் காணப்படும்.

*(b)* **கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்**

கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் என்பவை ஒரு செயற்திறமான சந்தையில் காட்டப்படாத வருமானம் உழைக்காத நிதிச் சொத்துக்களை அல்லது தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளைக் குறிக்கும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அத்தகைய நிதிச் சொத்துக்கள் பயனுறுதிவாய்ந்த வட்டி வீத (EIR) முறையைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அளவிடப்படும். கடன்தீர் செலவானது, கையகப்படுத்தலின் போதான ஏதேனும் விலைக்கழிவுகள், பயனுறுதிவாய்ந்த வட்டி முறையின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமான கட்டணங்கள் அல்லது செலவுகள் என்பவற்றைக் கவனத்தில எடுத்து கணக்கிடப்படுகின்றது. இந்த பயனுறுதிவாய்ந்த வட்டி வீத கடன்தீர்த்தலானது முழுமையான வருமானம் தொடர்பான அறிக்கைகளில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*(c)* **முதிர்ச்சி வரை வைக்கப்பட்ட முதலீடுகள்**

நிலையான அல்லது தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளையும் நிலையான முதிர்ச்சிக் காலங்களையும் கொண்ட வருமானம் உழைக்காத நிதிச் சொத்துக்கள், அவற்றை முதிர்ச்சி வரை வைக்கப்படுவதற்கு கம்பனி எண்ணுமாயின், முதிர்ச்சி வரை வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சி வரை வைக்கப்பட்ட முதலீடுகள் பயனுறுதிவாய்ந்த வட்டி வீத (EIR) முறையைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அளவிடப்படும். கடன்தீர் செலவானது, கையகப்படுத்தலின் போதான ஏதேனும் விலைக்கழிவுகள், பயனுறுதி வாய்ந்த வட்டி முறையின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமான கட்டணங்கள் அல்லது செலவுகள் என்பவற்றைக் கவனத்தில எடுத்து கணக்கிடப்படுகின்றது. இந்த பயனுறுதிவாய்ந்த வட்டி வீத கடன்தீர்த்தலானது முழுமையான வருமானம் தொடர்பான அறிக்கைகளில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வலுக்குன்றலின் மூலம் எழும் நட்டங்கள் முழுமையான வருமானம் தொடர்பான அறிக்கையில் நிதிச் செலவுகளின் கீழ் காட்டப்படுகின்றன.

*(d)* **விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதி மூதலீடுகள்**

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதி மூதலீடுகள் என்பதில் உரிமையாண்மை மற்றும் படுகடன் பிணையங்கள் உள்ளடங்குகின்றன. விற்பனைக்குரியவையாக வகைப்படுத்துப்பட்டுள்ள உரிமையாண்மை முதலீடுகள் என்பவை, விற்பனைக்கு வைப்பட்டுள்ள அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நேரியப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டவை என்பவற்றில் அடங்காதவற்றைக் குறிக்கும். இந்த வகையிலுள்ள படுகடன் பிணையங்கள் ஒரு நிச்சயமற்ற காலப்பகுதிக்கு வைத்திருக்க எண்ணியுள்ளதும், திரவத் தன்மைக்கான தேவையின் போது அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களின் போது விற்கப்படக் கூடியவையாகும்.

*ஆரம்ப அளவீட்டின் பின்னர், விற்பனைக்கு வைக்கப்பட்டு நிதி முதலீடுகள், தொடர்ச்சியான முறையில் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படும்.*

*தீர்வையாக ஈட்டங்கள் மற்றும் நட்டங்கள் நேரடியாக உரிமையாண்மையில் (ஏனைய முழுமையான வருமானம்) ''விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஒதுக்கங்கள்'' என்பதில் அடையாளம் காணப்படும். முதலீடுகள் அகற்றப்படும் போது, உரிமையாண்மையில் முன்னர் அடையாளம் காணப்பட்ட திரட்டிய ஈட்டம் அல்லது நட்டம் முழுமையான வருமானக் கூற்றில் ''ஏனைய தொழிற்பாட்டு வருமானம்' என்பதில் அடையாளம் காட்டப்படும். கம்பனி ஒரே பிணையத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட முதலீடுகளை வைத்திருக்குமாயின், அவை முதல் வாங்கியவை முதலில் விற்கப்படுகின்றன என்ற அடிப்படையில் கணிக்கப்படும். விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள முதலீடுகளை வைத்திருக்கும் போது உழைக்கப்பட்ட வட்டி பயனுறுதிவாய்ந்த வட்டி வீதத்தைப் பயன்படுத்தி வட்டி வருமானமாகக் காட்டப்படும். விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகளை வைத்திருக்கும் போது கிடைத்த பங்கிலாபங்கள்,அவற்றுக்கான கொடுப்பனவு உரிமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் முழுமையான வருமானக் கூற்றில் ''ஏனையவை தொழிற்பாட்டு வருமானம்' என்பதில் வருமானமாகக் காட்டப்படும். அத்தகைய முதலீடுகளின் வலுக்குன்றலின் மூலம் எழும் நட்டங்கள், முழுமையான வருமானக் கூற்றில் ''நிதி முதலீடுகளுக்கான வலுக்குன்றல் இழப்புக்களாக'' அடையாளம் காணப்பட்டு 'விற்பனைக்கு வைக்கப்பட்டு ஒதுக்கம்' என்பதிலிருந்து அகற்றப்படும்.*

***(d) விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதி மூதலீடுகள்***

*விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களை கிட்டிய காலத்தில் விற்பதற்கான ஆற்றலும் எண்ணமும் தொடர்ந்து பொருத்தமானதா என்று தீர்மானிப்பதற்காக கம்பனி விற்பனைக்குள்ள தனது சொத்துக்களை மதிப்பீடு செய்யும். செயற்படாத சந்தைகள் மற்றும் அவ்வாறு செய்வதற்கான நிர்வாகத்தின் நோக்கத்தின் காரணமாக இந்த நிதிச் சொத்துக்களை விற்பனை செய்ய முடியாதபோது, கிட்டிய எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்யும் போது, கம்பனி அரிதான சூழ்நிலைகளில் இந்த நிதிச் சொத்துக்களை மீண்டும் வகைப்படுத்தலாம். நிதிச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் என்ற வரைவிலக்கணத்துக்குப் பொருந்துகின்ற போது மீள் வகைப்படுத்தல் அனுமிக்கப்படுவதுடன், கம்பனி இந்த சொத்துக்களை கிட்டிய எதிர்காலத்தில் அல்லது முதிர்வு வரை வைத்திருக்கும் நோக்கமும் திறனும் கொண்டுள்ளது. முதிர்ச்சி வரை வைக்கப்பட்டுள்ளவற்றை மீள் வகைப்படுத்துவது, குறித்த நிறுவனத்தினால் குறித்த நிதிச் சொத்துக்களை நிறுத்தி வைப்பதற்கான ஆற்றலும் எண்ணமும் காணப்பட்டால் மாத்திரமே அனுமதிக்கப்படும்.*

*ஒரு நிதிச் சொத்தை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளவை பகுதியிலிருந்து மீள் வகைப்படுத்துவதற்கு, அந்தச் சொதுக்கான ஏதேனும் முன்னைய ஈட்டம் அல்லது நட்டங்கள் உரிமையாண்மையில் அடையாளம் காணப்பட்டிருந்தால் EIR ஐப் பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சியிருக்கும் ஆயுட் காலம் முழுவதிலும் இலாபம் அல்லது நட்டம் கடன்தீர்த்தலுக்கு உட்படுத்தப்படும். புதிய கடன்தீர்த்தல் செலவுக்கும் எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சலுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடுகளும் குறித்த சொத்தின் எஞ்சிய ஆயுட் காலம் முழுவதிலும் EIR ஐப் பயன்படுத்தி கடன்தீர்த்தலுக்கு உட்படுத்தப்படும். அச்சொத்து வலுக்குன்றியதாகப் பின்னர் தீர்மானிக்கப்படுமாயின், உரிமையாண்மையிலுத்த அதன் பெறுமதி முழுமையான வருமானக் கூற்றில் மீள் வகைப்படுத்தப்படும்.*

***1.3.6.3 ஐந்தொகையில் இருந்து நீக்கம்***

*ஒரு நிதிச் சொத்து (அல்லது ஒரு நிதிச் சொத்தின் அல்லது அதனையொத்த நிதிச் சொத்துக்கள் தொகுதியொன்றின் ஒரு பகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களில் ஐந்தொகையில் இருந்து நீக்கம் செய்யப்படும்.*

***(a)*** *சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைப்பதற்கான உரிமைகள் காலாவதியாதல்.*

***(b)*** *சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைப்பதற்கான உரிமைகளை கம்பனி உரிமை மாற்றம் செய்தல் அல்லது கிடைத்த காசுப் பாய்ச்சலொன்றை ''ஊடு மாற்றுதல்'' ஏற்பாட்டின் கீழ் ஒரு மூன்றாம் தரப்புக்கு கால தாமதமின்றி முழுமையாக செலுத்துவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ள போது, மற்றும் அல்லது*

*கம்பனி சொத்தின் அனைத்து இழப்பு அபாயங்களையும் பயன்களையும் கைமாற்றயிருத்தல், அல்லது கம்பனி சொத்தின் அனைத்து இழப்பு அபாயங்களையும் பயன்களையும் கைமாற்றவோ தக்க வைத்துக்கொள்ளவோ செய்யாமல், சொத்தின் கட்டுப்பாட்டை மற்றும் கைமாற்றியிருத்தல்.*

*கம்பனி ஒரு சொத்தின் மூலமான காசுப் பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமைகளை கைமாற்றியுள்ள போது அல்லது 'ஊடு கடத்தல்' ஏற்பாடொன்றைச் செய்து சொத்தின் அனைத்து இழப்பு அபாயங்களையும் பயன்களையும் கைமாற்றவோ தக்க வைத்துக்கொள்ளவோ அல்லது அதன் கட்டுப்பாட்டை கைமாற்றவோ இல்லாத பொது, அச்சொத்து கம்பனி ஈடுபாடு கொண்டுள்ள ஒரு சொத்தாக அடையாளம் காணப்படும்.*

அவ்வாறான சந்தர்ப்பங்களில், கம்பனி அதனை ஒரு இணைந்த பொறுப்பாகவும் கருதும். கைமாற்றப்பட்ட சொத்துக்களும் இணைந்த பொறுப்பும் கம்பனி தக்கவைத்துக் கொண்டுள்ள உரிமைகளையும் கடைமைகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் அளவிடப்படும்.

கைமாற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் ஒரு உத்தரவாத வடிவத்தைப் பெறுகின்ற தொடர்ச்சியான ஈடுபாடானது, அடிப்படை முன்கொணடு செல்லல் பெறுமதி, கம்பனி மீளச் செலுத்த வேண்டி ஏற்படும் அதிகபட்ச தொகை ஆகிய இரண்டில் குறைவான பெறுதியில் அளவிடப்படும்.

**1.3.6.4 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்**

ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் திகதியிலும் ஏதேனும் ஒரு நிதிச் சொத்து அல்லது ஒரு தொகுதி நிதிச் சொத்துக்கள வலுக்குறைவதற்கான உறுதியான சான்றுகள் உள்ளனவான என்று உறுதியாக அறிந்து கொள்வதற்காக கம்பனியினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு நிதிச் சொத்து அல்லது ஒரு தொகுதி நிதிச் சொத்துக்கள், அச்சொத்தின் (ஏற்பட்ட 'இழப்பு நிகழ்வு') ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் நிகழ்ந்த, ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருண்மையான சான்றுகள் இருந்தால், மாத்திரமே அவை வலுக்குன்றியவையாகக் கருதப்படுவதுடன், அந்த இழப்பு நிகழ்வு நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப்புழக்கங்கள் அல்லது நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துக்களின் குழுவில் தாக்கத்தை கொண்டுள்ளது. வலுக்குன்றலுக்கான சான்றுகளில், கடனாளர்கள் அல்லது ஒரு கடனாளர் குழு வட்டியை அல்லது மூலதனத் தொகையத் திருப்பிச் செலுத்துவதில் குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடிகளை, தவறுகையை, பொறுப்பின்மைக் காட்டுகின்ற அறிகுறிகளும், அவர்கள் வங்குரோத்துநிலைமை அடையும் சாத்தியம், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் அளவிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டும் அறிகுறிகள் போன்றவை அடங்கும்.

**நிதிச் சொத்துக்கள் கடன்தீர்த்தல் செலவில் முன் கொண்டு செல்லப்படுகின்றன.**

கடன்தீர்த்தல் முன் கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள் தொடர்பில், உறுதியான வலுக்குன்றல் சான்றுகள், நிதிச் சொத்துக்களுக்கு தனிப்பட்ட முறையில் முக்கியமானவையாக உள்ளனவா அல்லது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவமற்றதாக கூட்டாக முக்கியமானதாக உள்ளதா என்பதைக் கம்பனி முதலில் தீர்மானிக்கும். தனியாக மதிப்பிடப்பட்ட சொத்துக்கு ஒன்றுக்கு வலுக்குன்றலுக்கான உறுதியான சான்றுகள் காணப்படாதவிடத்து, அவை முக்கியமானவையாக இருப்பினும் அல்லது முக்கியமற்றவையாக இருப்பினும், அது நிதிச் சொத்துக்களின் தொகுதியொன்றை உள்ளடக்கியிருக்கும். வலுக்குன்றலுக்காக தனியாக மதிப்பிடப்பட்ட, வலுக்குன்றல் நட்டம் தொடர்ந்து காணப்படுவதாக அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள் வலுக்குன்றலுக்கான கூட்டு மதிப்பீட்டில் உள்ளக்கப்படமாட்டாது.

ஒரு வலுக்குன்றல் நட்டம் நிகழ்ந்துள்ளது என்று உறுதியான சான்றுகள் காணப்படுமாயின், அந்த நட்டத்தொகையானது சொத்தின் முன்கொண்டு செல்லப்பட்ட தொகைக்கும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்படும் (இதுவரை நிகழ்ந்திராத எதிர்பார்க்கப்படும் எதிர்கால கடன் இழப்புக்கள் நீங்கலாக). மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி, நிதிச் சொத்தின் அடிப்படை பயனறுதிவாய்ந்த வட்டி வீதத்தில் கழிக்கப்படும். ஒரு கடன் மாற்றமடையக்கூடிய வட்டி வீதத்தைக் கொண்டிருப்பின், ஏதேனும் ஒரு வலுக்குன்றல் இழப்புக்கான கழிப்பனவு வழங்கப்பட்ட வீதமானது தற்போதைய பயனுள்ள வட்டி வீதமாக அமையும்.

சொத்தின் முன்கொண்டு சென்ற தொகையானது, ஒரு விடுதொகை கணக்கைப் பயன்படுத்துவதன் ஊடாக முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ள இழப்புத் தொகையினால் குறைக்கப்படும். வட்டி வருமானம், குறைக்கப்பட்ட முன் கொண்டு செல்லப்பட்ட தொகைக்கு தொடர்ந்து சேர்க்கப்படும் என்பதுடன் அது எதிர்கால வலுக்குன்றல் இழப்பை மதிப்பிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப் பாய்ச்சலில் கழிப்பனவு வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும். இந்த வட்டி வருமானம், முழுமையான வருமானக் கூற்றில் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாகப் பதியப்படும். கடன்கள் எதிர்காலத்தில் மீள அறவிடப்படுவதற்கான சாத்தியம் காணப்படாத விடத்து, இணைந்த விடுதொகைகளுடன் சேர்த்து பதிவழிப்புச் செய்யப்பட்டு அனைத்து ஈட்டுப் பொருட்களும் கம்பனிக்கு மாற்றப்படும். பின்னர் வரும் ஒரு வருடத்தில், மதிப்பிடப்பட்ட வலுக்குன்றலின் தொகையானது, வலுக்குன்றல் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் நிகழ்ந்த ஒரு நிகழ்வினால் அதிகரிக்குமாயின் அல்லது குறைவடையுமாயின், விடுதொகைக் கணக்கில் செம்மையாக்கங்கள் செய்வதன் மூலம் முன்னர் அடையாளம் காணப்பட்ட வலுக்குன்றல் இழப்பு அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். எதிர்காலப் பதிவழிப்பு ஒன்று பின்னர் மீள அறவிடப்பட்டால், மீள அறவிடப்பட்ட தொகையானது முழுமையான நிதிக் கூற்றில் நிதிச் செலவில் வரவு வைக்கப்படும்.

**விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள்**

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களைப் பொறுத்த வரையில், ஏதேனும் ஒரு முதலீடு அல்லது முதலீடுகளின் தொகுதியொன்று வலுக்குன்றியுள்ளமைக்கான உறுதியான சான்றுகள்

உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் கம்பனியினால் மதிப்பீடு செய்யப்படும். உரிமயாண்மை முதலீடுகள் விற்பனைகுரியவையாக வகைப்படுத்தப்படுமாயின், உறுதியான சான்றானது, ஒரு முதலீட்டின் நேரியப் பெறுமதி, அதன் செலவுக்கு கீழே குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட கால வீழ்ச்சியை உள்ளடக்கும். "குறிப்பிடத்தக்க" என்பது முதலீட்டின் அடிப்படைச் செலவுடன் ஒப்பிட்டு மதிப்பிடப்படும், "நீடித்த" என்பது நேரியப் பெறுமதி அதன் அடிப்படைச் செலவை விடக் குறைவாக உள்ள காலப் பகுதியைக் குறிக்கும். வலுக்குன்றலுக்கான சான்றுகள் காணப்படுமாயின், திரட்டிய நட்டமானது கையகப்படுத்தல் செலவுக்கும் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு இடையிலான வேறுபாட்டிலிருந்து, முழுமையான வருமானக் கூற்றில் முன்னர் அடையாளம் காணப்பட்ட முதலீட்டின் ஏதேனும் வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்து அளவிடப்படும் என்பதுடன் அத முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும். உரிமையாண்மை முதலீடுகளுக்கான வலுக்குன்றல நட்டங்கள், முழுமையான வருமானக் கூற்றின் ஊடாக மீளமைக்கப்படமாட்டாது. அது ஏனைய முழுமையான வருமானத்தில் வலுக்குன்றல்கள் நேரடியாக அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அவற்றின் சந்தைப் பெறுதியை அதிகரிக்கும்.

படுகடன் சாதனங்கள், விற்பனைக்கு வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுமாயின், வலுக்குன்றல்கள் நிதிச் சொத்துக்கள் கடன்தீர்த்தல் செலவில் முன் கொண்டு செல்லப்படும் அதே அளவுகோளின் அடிப்படையில் மதிப்பிடப்படும். எவ்வாறாயினும், வலுக்குன்றலுக்காகப் பதியப்பட்ட தொகையானது திரட்டிய நட்டம், கடன்தீர் செலவுக்கும் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து, அந்த முதலீட்டுக்காக முன்னர் முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்ட தொகைகளை கழிப்பதன் மூலம் அடையாளம் காணப்படும்.

எதிர்கால வட்டி வருமானம், குறைக்கப்பட்ட முன் கொண்டு செல்லப்பட்ட தொகைக்கு தொடர்ந்து சேர்க்கப்படும் என்பதுடன் அது எதிர்கால வலுக்குன்றல் இழப்பை மதிப்பிடும் நோக்கத்திற்ககாக எதிர்கால காசுப் பாய்ச்சலில் கழிப்பனவு வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும். இந்த வட்டி வருமானம், நிதி வருமானத்தின் ஒரு பகுதியாகப் பதியப்படும். தொடர்ந்து வரும் வருடமொன்றில், படுகடன் சாதனமொன்றின் சந்தைப் பெறுமதி அதிகரித்து, அந்த அதிகரிப்பை ஏற்கனவே முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் கண்ட வலுக்குன்றலுக்குப் பின்னர் நிகழ்ந்த ஓர் நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியுமாயின், அந்த வலுக்குன்றல் இழப்பை முழுமையான வருமானக் கூற்றின் ஊடாக மீட்டமைக்க முடியும்.

### 1.3.7 நிதிப் பொறுப்புக்கள்

கம்பனி தனது நிதிப் பொறுப்புக்களை, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நேரியப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்களாக அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தும். இந்த அறிக்கையிடல் திகதியில் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நேரியப் பெறுமதியைக் கொண்ட நிதிப் பொறுப்புக்கள் எதுவும் காணப்படவில்லை.

### 1.3.7.1 ஆரம்ப அடையாளம் காணல் மற்றும் அளவீடு

அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அடையாளம் காணப்படும். இதில் நேரடியாகச் சேர வேண்டிய கொடுக்கல் வாங்கல் செலவுகளை உள்ளடக்கியதாக இருக்கும். கம்பனியின் நிதிப் பொறுப்புக்களில் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகள் மற்றும் வங்கி மேலதிகப்பற்றுக்கள் என்பன உள்ளடங்கும்.

### 1.3.7.2 பின்தொடர் அளவீடுகள்

நிதிப் பொறுப்புக்களின் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலைப் பொறுத்து பின்வருமாறு அமையும்:

**(a) இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நேரியப் பெறுமதியிலான நிதிப் பொறுப்புக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சந்தைப் பெறுமதியிலான நிதிப் பொறுப்புக்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்களும் ஆரம்ப அடையாளம் காணலின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நேரியப் பெறுமதியிலுள்ளவையாகத் தீர்மானிக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் என்பன உள்ளடங்கும். நிதிப் பொறுப்புக்கள், விற்பனை நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருந்தால் அவை வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவை என்று அடையாளம் காணப்படும்.

**(b) ஏனைய நிதிப் பொறுப்புக்கள்**

ஏனைய நிதிப் பொறுப்புக்கள் பின்னர் பயனுறுதி வாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி படிப்படியான பதிவழிப்புச் செலவின் கீழ் அளவிடப்படும். பொறுப்புக்கள் ஐந்தொகையிலிருந்து நீக்கப்படும் போது முழுமையான வருமானக் கூற்றில் ஈட்டங்கள் அல்லது நட்டங்கள் அடையாளம் காணப்படும். கடன்தீர் செலவானது, கையகப்படுத்தலின் போதான ஏதேனும் விலைக்கழிவுகள், பயனுறுதி வாய்ந்த வட்டி முறையின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமான கட்டணங்கள் அல்லது செலவுகள் என்பவற்றைக் கவனத்தில எடுத்து கணக்கிடப்படுகின்றது. இந்த பயனுறுதிவாய்ந்த வட்டி வீத கடன்தீர்த்தலானது முழுமையான வருமானம் தொடர்பான அறிக்கைகளில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.3.7.3 ஐந்தொகையில் இருந்து நீக்கம்

*ஒரு நிதிப் பொறுப்பு, அதன் கீழான கடப்பாடு நிறைவேற்றப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது ஐந்தொகையில் இருந்து நீக்கப்படும். தற்போதைய நிதிப் பொறுப்பு ஒன்று அதே கடன் வழங்குனர் மூலமான குறிப்பிடத்தக்க வித்தியாசமான நிபந்தனைகளின் கீழ், அல்லது தற்போது காணப்படும் நிபந்தனைகளில் கணிசமான மாற்றங்கள் செய்து, மற்றொரு நிதிப் பொறுப்பினால் ஈடு செய்யப்படுமாயின், குறிப்பிட்ட முன்கொண்டு செல்லப்பட்ட தொகையிலுள்ள வேறுபாடு முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.*

***1.3.7.4 நிதிச் சாதனங்களைப் பதிலீடு செய்தல்***

*தற்போது நடைமுறைப்படுத்த முடியுமான உரிமையான தொகைகளை ஈடு செய்வதற்கான சட்டரீதியான உரிமையைக் கொண்டுள்ள போது மாத்திரம் நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஈடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுவதுடன், நிகர அடிப்படையில் தீர்வு காணும் அல்லது சொத்துக்களை உணர்ந்து கடன்களை ஒரே நேரத்தில் தீர்க்கும் எண்ணம் உள்ளது.*

***1.3.8 பொருட் பட்டியல்கள்***

*காலங் கடந்த மற்றும் மந்த கதியில் விற்கப்படும் பொருட்களுக்கான விடுதொகைகளை ஏற்பாடு செய்ததன் பின்னர், குறைந்த செலவு மற்றும் தீர்க்கக் கூடிய தேறிய பெறுமதியிலும் அளவீடு செய்யப்படும். தேறிய தீர்வையாகக் கூடிய பெறுமதி என்பது சாதாரண வியாபாரச் செயற்பாடுகளில் பூர்த்தி செய்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவையும் விற்பனைக்கு தேவையான செலவை கழித்து விற்க முடியுமான தொகையாகும்.*
*பொருட் பட்டியல்களை அவற்றின் தற்போதைய அமைவிடத்துக்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட செலவுகள் பின்வரும் செலவு வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படும்:*

*மூலப் பொருட்கள் - நிறையிடப்பட்ட சராசரியின் அடிப்படையில் செலவு தீர்மானிக்கப்படும்.*

*முடிவுப் பொருட்கள் - நேரடியான பொருட்கள், நேரடியான ஊழியம் என்பவற்றுக்கான செலவு மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்ளளவில் நிலையான உற்பத்திச் செலவுகளில் பொருத்தமான விகிதம் என்பவற்றின் அடிப்படையில்*

*நடைபெற்று வரும் வேலைகள் - உள்ளீட்டுப் பொருட்களின் செலவின அடிப்படையில்*

*பொதிசெய்தல் பொருட்கள் - நிறையிடப்பட்ட சராசரியின் அடிப்படையில் செலவு தீர்மானிக்கப்படும்,*

*ஏனைய கையிருப்புக்கள் - நிறையிடப்பட்ட சராசரியின் அடிப்படையில் செலவு தீர்மானிக்கப்படும்,*

*இடைத்தங்கலில் உள்ள பொருட்கள் - உள்ளபடியான செலவில்*

***1.3.9 வரத்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்***

*வர்த்தகத்தில் கிடைக்க வேண்டியவைகள் ஆரம்பத்தில் நேரியப் பெறுமதியில் அடையாளம் காணப்பட்டு பின்னர் பயனுறுதி வாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி படிப்படியான கடன்தீரத்தல் செலவின் கீழ் அளவிடப்படும்.*

*ஏனைய கிடைக்க வேண்டியவைகள், வலுக்குன்றலுக்கான ஏற்பாடுகளின் தேறிய பெறுமதியைத் தீர்வையாக்கு மதிப்பிடப்பட்ட தொகையாக அமையும். இந்த ஏற்பாட்டுத் தொகை விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், கம்பனியின் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஊழியர் கடன்கள் கடன்தீர்ததல் செலவின் அடிப்படையில் அளவிடப்படவில்லை.*

***1.3.10 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை***

*காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் என்பதில் கையிருப்பிலுள்ள காசு, வங்கிகளில் அழைப்பு வைப்புக்களாக உள் வைப்புக்கள், ஏனைய அடிப்படை முதிர்ச்சிக் காலமாக மூன்று மாதங்களைக் கொண்ட குறுகிய கால திரவத் தன்மை கொண்ட முதலீடுகள் என்பன உள்ளடங்கும். வங்கி மேலதிகப்பற்றுக்கள் நிதி நிலைமை அறிக்கையில் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பதில் காட்டப்பட்டுள்ளன.*

***1.3.11 குறிப்பிடப்பட்ட மூலதனம்***

***(a) வகைப்படுத்தல்***

***காசு அல்லது ஏனைய சொத்துக்களை மாற்றுவதற்கான கடப்பாடுகள் எதுவும் இல்லாத போது நிர்ணயிக்கப்பட்ட பங்கிலாபங்களுடனான சாதாரண பங்குகள் உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.***

***(b) பங்கிலாபங்கள்***

*பங்குதாரர்களின் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகின்றது போது பங்கிலாபம் அடையாளம் காணப்படும். உரிமையாண்மை பங்காளர்களுக்கான இடைக்காலப் பங்கிலாபங்கள், பணிப்பாளர்களால் பிரகடனப்படுத்தப்படும் போது அவை அடையாளம் காணப்படும். இறுதிப் பங்கிலாபங்களைப் பொறுத்த வரையில், வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குரிமையாளர்களால் அங்கீகரிக்கப்படும் போது அடையாளம் காணப்படும்.*

### *1.3.12* நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி

**a) நடைமுறை வரிகள்**

*தற்போதைய மற்றும் முன்னைய காலப் பகுதிகளுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அறவிட எதிர்பார்க்கும் , அல்லது செலுத்த எதிர்பார்க்கும் அளவின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றன.*

*வருமான வரிக்கான ஏற்பாடு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவினங்களின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் விதிகளின்படி கணக்கிடப்படுகிறது .*

**b) ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு**

*சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் கொண்டு செல்லப்படும் அளவுக்கும் இடையில் எழும் தற்காலிக வேறுபாடுகளின் அடிப்படையில் பொறுப்பு முறையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படும்.*

*அனைத்து தற்காலிக வேறுபாடுகள் தொடர்பிலும் பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அடையாளம் காணப்படும். கழிக்க முடியுமான தற்காலிக வேறுபாடுகள், முன்கொண்டு சென்ற பயன்படுத்தப்படாத வரி வரவுகள், பயன்படுத்தப்படாத கடன் இழப்புக்கள் ஆகிய அனைத்துக்கும் பிற்போட்ட வரிச் சொத்துக்கள், கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள், முன்கொண்டு செல்லத்தக பயன்படுத்தப்படாத இழப்புக்கள் என்பவற்றுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடிய அளவில் அடையாளம் காணப்படும்.*

*பிற்போட்ட வரிச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் தொகை, பிற்போட்ட வரிச் சொத்துக்களின் அனைத்துப் பகுதிகளிலும் பயன்டுத்தக் கூடிய அளவுக்குப் போதுமான வரிவிதிக்கத்தக்க இலாபம் சாத்தியமில்லாத நிலை வரை ஒவ்வொரு நிதி நிலைமை அறிக்கைத் திகதியிலும், மீளாய்வு செய்யப்படும். அடையாளம் காணப்படடாத பிற்போட்ட வரிச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் தொகை, பிற்போட்ட வரிச் சொத்துக்களின் அனைத்துப் பகுதிகளிலும் பயன்டுத்தக் கூடிய அளவுக்குப் போதுமான வரிவிதிக்கத்தக்க இலாபம் சாத்தியமில்லாத நிலை வரை ஒவ்வொரு நிதி நிலைமை அறிக்கைத் திகதியிலும், மீளாய்வு செய்யப்படும்.*

*பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும், குறித்த சொத்து தீர்வையாகும் போது அல்லது பொறுப்பு தீர்க்கப்படும் போது நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களை அல்லது பெரும்பாலும் சட்டமாக்கப்படவுள்ள குறித்த வருடத்திற்கு பிரயோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கக் கூடிய வரி வீதங்களில் அளவிடப்படும்.*

*உரிமையாண்மையில் அடையாளம் காணப்பட்டுள்ள விடயங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய வருமான வரிகள் உரிமையாண்மையில் அடையாளம் காணப்படும்.*

*நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக தற்போதைய வரிச் சொத்துகளை பதிலீடு செய்வதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் காணப்படுமிடத்து மற்றும் பிற்போட்ட வரிகள் அதே வரிவிதிக்கத்தக்க நிறுவனத்திற்கும் அதே வரி விதிப்பு அதிகாரசபைக்கும் தொடர்புடையாக இருப்பின், பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பிற்போட்ட வரிப் பொறுப்புக்களும் பதிலீடு செய்யப்படும்.*

### *1.3.13* ஊழியர் நன்மைகள்

***(a) வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் – பணிக்கொடை***

*LKAS 19/ 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் என்பவற்றுக்கு இணக்கமான முறையில் பணிக்கொடைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புக்கு வெளியிலிருந்து நிதியிடப்படவில்லை. பணிக்கொடைப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட சேரவேண்டிய மதிப்பீடுகளின் அடிப்படையில் அமையும். இயல்பான ஈட்டங்களும் நட்டங்ளும் அவை எழும் காலப் பகுதிக்கான ஏனைய முழுமையான வருமானக் கூற்றில் அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும்.*

*கம்பனியின் ஓய்வூதியப் நன்மை கடப்பாடுகள், Actuarial & Management Consultants (Pvt) Ltd கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட இயல்பான பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மதிப்பீட்டுச் செயற்பாட்டின் சிக்கலான தன்மையானது எடுகோள்களைப் பொறுத்ததாகும் என்பதுடன், அதன் நீண்ட காலத் தன்மை, வரையறை செய்யப்பட்ட நன்மை கடப்பாடுகள் என்பன இந்த எடுகோள்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பட்ட அதிகளவில் மாற்றமடையக் கூடியவையாகும். ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அனைத்து எடுகோள்களும் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள் உள்ளடங்கியுள்ள முக்கியமான எடுகோள்கள் பற்றிய விபரங்கள் குறிப்பு இல. 16 இல் தரப்பட்டுள்ளன. பிரதான எடுகோள்கள், மரண, அங்கவீன வீதங்கள் மற்றும் மீளப் பெறல் வீதங்கள் என்பவற்றுடன் தொடர்புடையவையாக உள்ளன. விலைக்கழிவு வீதம் மற்றும் சம்பள அதிகரிப்பு வீதம் என்பன தொடர்பான அனுமானங்கள், இறுதிச் சம்பள ஓய்வூதியத் திட்டத்திற்கான அளவைத் தீர்மானிப்பதில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.*

***(b) வரையறைசெய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்***

*தொடர்புடைய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதிபெறுகின்றனர். இக்கம்பனி ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ஊழியர்களின் ஊதியத்தின் முறையே 12% மற்றும் 3% வீதங்களை பங்களிப்புச் செய்கின்றது.*

***1.3.14 கொடைகள் மற்றும் மானியங்கள்***

*கொடைகள் மற்றும் மானியங்கள் தொடர்புடைய செலவுகளைப் பொருத்துவதற்காக தேவையான காலப்பகுதி முழுவதிலும் முழுமையான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படுகின்றன.*

*சந்தைப் பெறுதியிலான பணமல்லாதவை அடங்கலாக, சொத்துக்களுடன் தொடர்புடைய கொடைகள், நிதி நிலைமை அறிக்கையில் காட்டப்பட்டு தொடர்புடைய சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதிலும் முழுமையான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படும்.*

*வருமானத்துடன் தொடர்புடைய கொடைகள் அவை கிடைக்க வேண்டிய வருடத்தின் முழுமையான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.*

***1.3.15 வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்***

*வர்த்தக செலுத்த வேண்டியவைகள் என்பவை வியாபாரத்தின் சாதாரண போக்கில் பெறப்பட்ட சேவைகளுக்காகச் செலுத்த வேண்டிய கடப்பாடுகளைக் குறிக்கும். கொடுப்பனவு ஒரு வருடம் அல்லது அதனை விடக் குறைவான காலப் பகுதியில செலுத்தப்பட வேண்டுமாயின், அவை நடைமுறைப் பொறுப்புக்களின் வகைப்படுத்தப்படும், அவ்வாறில்லையெனின் அவை நடைமுறையல்லாப் பொறுப்புக்களாகக் காட்டப்படும்.*

*வர்த்தக செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நேரியப் பெறுமதியில் அடையாளம் காணப்பட்டு பின்னர் பயனுறுதி வாய்ந்த வட்டி முறையைப் பயன்படுத்தி படிப்படியான கடன்தீரத்தல் செலவின் கீழ் அளவிடப்படும். விலைக் கழிவின் தாக்கம் முக்கியமற்றதாக இருப்பதனால், வட்டி வீதம் குறிப்பிடப்படாத குறுகிய கால கொடுக்க வேண்டியவைகள் அவற்றின் இன்வொய்ஸ் செய்யப்பட்ட அடிப்படைப் பெறுமதியில் அளவிடப்படும்.*

***1.3.16 ஏற்பாடுகள்***

*கடந்த கால நிகழ்வின் விளைவாக நிறுவனத்திற்கு தற்போதைய கடமை சட்டபூர்வமானதாக அல்லது ஆக்கபூர்வமானதாக இருக்கும்போது ஏற்பாடுகள் அடையாளம் காணப்படுகின்றன. அங்கு கடமைக்கு தீர்வு காண பொருளாதார நன்மைகளை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாடு தேவைப்படலாம் மற்றும் நம்பகமான மதிப்பீட்டை உருவாக்க முடியும். எதிர்கால தொழிற்பாட்டு நட்டங்களுக்காக ஏற்பாடுகள் அடையாளம் காணப்படமாட்டாது.*

*அதனையொத்த கடப்பாடுகளில், தீர்க்கின்ற போது ஒரு வெளிப்பாய்ச்சல் தேவைப்படும் நிலைமை காணப்படுமாயின், கடப்பாடுகளை வகுப்பை முழுமையாகக் கவனத்திற் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படும். ஒரே வகையான கடப்பாடுகளினுள் உள்ளடங்கும் ஏதேனும் ஒரு விடயத்துக்கான வெளிப்பாய்ச்சல் சிறியதாக இருப்பினும அதற்கு ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படும்.*

***1.3.17 அர்ப்பணிப்புக்கள்***

*அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறன முக்கியமான அர்ப்பணிப்புக்கள் அனைத்தும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

***1.3.18 தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்***

*ஒரு விலை அறிவிடப்படுமா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது, ஒரு தரப்பு மற்றைய தரப்பின் நிதி மற்றும் தொழிற்பாட்டு கொள்கைகளை/ தீர்மானங்களைக் கட்டுப்படுத்தும் அல்லது அவற்றின் மீது குறிப்பிடத்தக்களவில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ள பரிமாற்றங்கள் தொடர்பில்*

*வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன. தாய்க் கம்பனிக்கும் துணைக் கம்பனிகளுக்கும் இடையிலான தொடர்புகள், தொடர்புடைய தரப்புக்கள் மத்தியில் பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது வெளிப்படுத்தப்பட வேண்டும்.*

***1.3.19 வருமான ஏற்பு***

*வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்து வருமானம்*
*அந்த பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ஈடாக கம்பனி எதிர்பார்க்கும் கருத்தில் பிரதிபலிக்கும் ஒரு தொகையில் பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் போது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.*

***(a) ஒரு குறிப்பிட்ட காலத்தில் மாற்றப்பட்ட பொருட்கள்***

*SLFRS 15 இன் கீழ், செயலாற்றுகை கடப்பாட்டின் திருப்தியின் அடிப்படையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது. பொதுவாக, பொருட்களை வழங்கும் போது, வாடிக்கையாளருக்கு சொத்தின் கட்டுப்பாடு மாற்றப்படும் ஒரு கட்டத்தில் வருமான ஏற்பு ஏற்படுகிறது.*

***(b) காலப்போக்கில் மாற்றப்பட்ட சேவை***

*SLFRS 15 இன் கீழ், ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், காலப்போக்கில் அல்லது ஒரு கட்டத்தில் செயலாற்றுகை கடமையை திருப்திப்படுத்துகிறதா என்பதை கம்பனி தீர்மானிக்கிறது. காலப்போக்கில் திருப்தி அடைந்த ஒவ்வொரு செயலாற்றுகை கடமைக்கும், அந்த செயலாற்றுகை கடமையின் முழுமையான திருப்தியை நோக்கி முன்னேற்றத்தை அளவிடுவதன் மூலம் கம்பனி காலப்போக்கில் வருமானத்தை அங்கீகரிக்கிறது.*

***(c) வட்டி வருமானம்***

*வட்டி வருமானமானது பயனுறுதிவாய்த வட்டி முறையைப் பயன்படுத்த அடையாளம் காணப்படுகின்றது.*

***(d) பங்கிலாப வருமானம்***

*கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற போது பங்கிலாப வருமானம் அடையாளம் காணப்படும்.*

***(e) வேறு வருமானங்கள்***

*ஏனைய வருமானங்கள் சேர வேண்டிய அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.*

***1.3.20 செலவினம்***

*செலவினங்கள் சேர வேண்டிய அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. வியாபாரத்தின சாதாரன நடவடிக்கைகளின் போதும், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை வினைத்திறனுள்ள நிலையில் பேணுவதற்காகவும் உற்படும் அனைத்துச் செலவினங்களும், வருடத்திற்கான இலாபத்திலிருந்து அறவிடப்படும்.*

*முழுமையான வருமானக் கூற்றின் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான நோக்கத்திற்காக, செலவினங்களை வகைப்படுத்துவதற்கு, தொழிற்பாடுகளின் அடிப்படையிலான செலவு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

2. சொத்து ஆலை மற்றும் உபகரணம்

a) உருவச் சொத்துக்கள்

| சொத்துக்கள் பற்றிய விபரம் | செலவு /மதிப்பீடு மீதி 2021.01.01 இல் உள்ளவாறு மீதி ரூ. | சேர்க்கைகள் ரூ. | அகற்றுதல்கள் ரூ. | மாற்றல்கள் ரூ. | மீதி 2021.12.31 இல் உள்ளவாறு ரூ. | பெறுமானத்தேய்வு மீதி 2021.01.01 இல் உள்ளவாறு மீதி ரூ. | ஆண்டுக்கான கட்டணம் ரூ. | அகற்றுதல்கள் மீதானது ரூ. | மாற்றல்கள் ரூ. | மீதி 2021.12.31 இல் உள்ளவாறு ரூ. | சொத்தின் கழிந்த பெறுமானம் 2021.01.01 இல் உள்ளவாறு மீதி ரூ. | 2021.12.31 இல் உள்ளவாறு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **இறையிலி** | | | | | | | | | | | | |
| காணி | 3,250,000 | | - | | 3,250,000 | - | | | | - | 3,250,000 | 3,250,000 |
| கட்டிடங்கள் | 520,473,372 | | - | | 520,473,372 | 214,249,986 | 42,816,620 | - | | 257,066,606 | 306,223,386 | 263,406,766 |
| ஆலை மற்றும் இயந்திராதிகள் | 7,526,283,307 | 56,757,102 | - | | 7,583,040,409 | 2,328,742,898 | 395,647,630 | - | | 2,724,390,529 | 5,197,540,409 | 4,858,649,881 |
| தளபாடம் மற்றும் பொருத்துதல் | 52,975,771 | 3,276,009 | - | | 56,251,780 | 44,157,965 | 3,413,658 | - | | 47,571,622 | 8,817,806 | 8,680,157 |
| ஆய்வுகூட உபகரணம் | 85,143,815 | 2,604,219 | - | | 87,748,034 | 68,534,460 | 5,178,643 | - | | 73,713,104 | 16,609,354 | 14,034,930 |
| மோட்டார் வாகனங்கள் | 147,942,408 | | - | (11,000,160) | 136,942,248 | 156,393,667 | 2,431,269 | - | (687,510) | 158,137,427 | (8,451,259) | (21,195,179) |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 349,504,412 | 24,624,872 | (20,614) | | 374,108,670 | 297,804,319 | 26,259,186 | (8,933) | | 324,054,572 | 51,700,094 | 50,054,098 |
| போத்தல்கள் மற்றும் கூடைகள் | 367,060,224 | 14,249,916 | - | | 381,310,140 | 340,664,284 | 15,859,064 | - | | 356,523,348 | 26,395,940 | 24,786,792 |
| கணினி உபகரணங்கள் | 55,303,068 | 10,721,631 | - | | 66,024,699 | 44,658,892 | 7,202,800 | - | | 51,861,692 | 10,644,175 | 14,163,006 |
| போத்தல் குளிரேற்றிகள் | 152,100,544 | 92,140,780 | - | | 244,241,324 | 146,103,948 | 12,853,898 | - | | 158,957,846 | 5,996,596 | 85,283,478 |
| அலுவலக உபகரணங்கள் | 10,776,014 | 1,533,480 | (28,000) | | 12,281,495 | 8,888,627 | 1,199,440 | (23,428) | | 10,064,639 | 1,887,387 | 2,216,855 |
| பால் கேன்கள் | 80,187,849 | 19,996,311 | - | | 100,184,160 | 70,791,363 | 4,732,036 | - | | 75,523,399 | 9,396,486 | 24,660,761 |
| | 9,351,000,784 | 225,904,321 | (48,614) | (11,000,160) | 9,565,856,330 | 3,720,990,410 | 517,594,245 | (32,361) | (687,510) | 4,237,864,785 | 5,630,010,374 | 5,327,991,546 |
| b) **அருவச் சொத்துக்கள்** | | | | | | | | | | | | |
| கணினி மென்பொருள் | 2,837,209 | 300,000 | - | 4,179,530 | 7,316,739 | 2,799,766 | 121,279 | - | | 2,921,045 | 37,443 | 4,395,694 |
| **மொத்தம்** | 9,353,837,993 | 226,204,321 | (48,614) | (6,820,630) | 9,573,173,069 | 3,723,790,176 | 517,715,524 | (32,361) | (687,510) | 4,240,785,829 | 5,630,047,816 | 5,332,387,240 |

2.1 சொத்து பயன்பாட்டு உரிமை

| | பெறுமதி மீதி 2021.01.01 இல் உள்ளவாறு மீதி | சேர்க்கைகள் | அகற்றுதல்கள் | மாற்றல்கள் | மீதி 2021.12.31 இல் உள்ளவாறு | கடன்தீர்ப்பு மீதி 2021.01.01 இல் உள்ளவாறு மீதி | கட்டணம் | அகற்றுதல்கள் | மாற்றல்கள் | மீதி 2021.12.31 இல் உள்ளவாறு | நிகர பெறுமதி 2021.01.01 இல் உள்ளவாறு மீதி | 2021.12.31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| c) **குத்தகைச் சொத்து** | | | | | | | | | | | | |
| மோட்டார் வாகனங்கள் | 73,187,966 | - | - | 24,119,710 | 97,307,676 | 24,872,032 | 13,051,662 | - | 687,510 | 38,611,204 | 48,315,935 | 58,696,472 |
| **மொத்தம்** | 73,187,966 | - | - | 24,119,710 | 97,307,676 | 24,872,032 | 13,051,662 | - | 687,510 | 38,611,204 | 48,315,935 | 58,696,472 |

3.1 சொத்து பயன்பாட்டு உரிமை தொடர்பான பின்வரும் தொகைகள் ஆண்டு வருமான கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சொத்து பயன்பாட்டு உரிமை கடன்தீர்நிதி மூலமாகக் கடன் குறைத்தல் | 13,051,662 |
| குத்தகை பொறுப்புகள் மீதான வட்டி | 1,787,690 |

| | | 2021.01.01 இல் மீதி ரூ. | இக் காலப்பகுதியில் ஏற்பட்ட ரூ. | இக்காலப்பகுதியில் மூலதனமாக்கப்பட்ட அறவிடப்பட்ட ரூ. | 2021.12.31 இல் மீதி ரூ. |
|---|---|---|---|---|---|
| 3. | **முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி** | | | | |
| | புதிய பால் தொழிற்சாலை நிர்மாணம் - படல்கம (குறிப்பு 14 ஐப் பார்க்கவும்) * | 11,672,291,523 | 196,215,332 | - | 11,868,506,855 |
| | கெட்டம்பே விற்பனை நிலைய நிர்மாணம் | 150,000 | - | - | 150,000 |
| | கப் அன் கோன் ஃபில்லர் நிறுவுதல் - திகன பால் ஆலை | 15,445,587 | - | - | 15,445,587 |
| | தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கல்- பொலன்னறுவை, அம்பேவெல மற்றும் திகன | 790,264,562 | - | - | 790,264,562 |
| | ப்ரோ-ஃபிட் முகாமைத்துவ தகவல் முறைமை நடைமுறைப்படுத்தல் | 4,179,530 | - | 4,179,530 | - |
| | முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாத லொரி செஸிகள் | 17,714,550 | 339,708 | 13,119,550 | 4,934,708 |
| | குளிரூட்டும் மையம் நிர்மாணம்-லுனுகல | 250,480 | - | 250,480 | - |
| | திகன பால் தொழிற்சாலையில் அலுவலக கட்டிடம் நிர்மாணம் | 19,635,143 | 9,962,262 | - | 29,597,405 |
| | பொலன்னறுவை பால் தொழிற்சாலையில் குளிரூட்டல் அறை நிர்மாணம் | 16,169,330 | 7,543,255 | - | 23,712,585 |
| | குளிரூட்டும் மையம் நிர்மாணம்- முந்தல் | 291,793 | - | 291,793 | - |
| | சுற்றுலா பங்களா புனரமைப்பு | - | 2,546,752 | - | 2,546,752 |
| | படல்கம தொழிற்சாலையில் காப்பு தொட்டியின் நிர்மாணம் | - | 13,280,786 | - | 13,280,786 |
| | | 12,536,392,498 | 229,888,095 | 17,841,353 | 12,748,439,240 |

3.1 இந்த நிதிநிலை கூற்றுக்களின் குறிப்பு எண் 14 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, மேற்கண்ட தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல் மற்றும் புதிய பால் தொழிற்சாலை நிர்மாணம்- படல்கம ஆகியவை இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியினால் வழங்கப்பட்ட கடன்களால் நிதியளிக்கப்பட்டுள்ளன.

3.2 இயல்புநிலையைக் கருத்திற் கொண்டு, லுனுகல மற்றும் முந்தலம குளிரூட்டும் நிலையங்களுக்குச் செய்யப்பட்ட செலவுகள் ரூ.250,480 மற்றும் ரூ.291,793 இந்த ஆண்டின் போது வருமான அறிக்கைக்கு அறவிடப்பட்டுள்ளன.

| | | | 2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூ. | 2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூ. |
|---|---|---|---|---|
| 4 | **நிதியியல் கருவி - கடனீட்டு செலவு** | | | |
| 4.1 | **நீண்ட கால நிலையான வைப்பு** | | | |
| | நிலையான வைப்பு - இலங்கை வங்கி - அ.டொ | | 692,013,432 | 606,519,828 |
***2018 ஆம்ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி, 2021 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மில்கோ (தனியார்) கம்பனியின் நிதி நிலை அறிக்கைகள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை***

***1. நிதியியல் கூற்று***

***1.1 மறுப்புக்கான அபிப்ராயம்***

*மில்கோ (தனியார்) நிறுவனத்தின் ("கம்பனி") 2021 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைக் கூற்றுக்கள், அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் சாரம்சத்தை உள்ளடக்கிய 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது வழிகாட்டலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.*

*கம்பனியின் நிதிக்கூற்று தொடர்பில் நான் எனது அபிப்பிராயத்தை தெரிவிக்கவில்லை. அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படை என்ற பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்று தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் முடியவில்லை.*

### *1.2 அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படை*

*(அ) இலங்கை கணக்கீட்டு தரநியம இலக்கம் 01 இன் 32 வது பந்தியின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவு நிலுவைகளைத் தீர்த்து நிதிநிலை அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்படுதல் கூடாது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*(i) மீளாய்வு ஆண்டில் வணிகக் கடன் வழங்குநர்களின் கணக்கிற்கு ரூபா. 18,297,619 ஆன தொகை பற்று நிலுவையில் தீர்க்கப்பட்டு நிகர வணிக கடன் வழங்குநர்களின் நிலுவையான ரூபா. 349,759,934 ஆன தொகை நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.*

*(ii) மீளாய்வு ஆண்டில் பிற கடன் வழங்குநர்கள், அட்டுறு கொடுப்பனவுகள், அரச நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகள் மற்றும் பிற தரப்பினர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் மொத்தமாக ரூபா. 112,725,177 ஆன தொகை தீர்க்கப்பட்டுள்ளதால் அதன் பெறுமதியில் மேற்படி நிலுவை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.*

*(iii) மீளாய்வு ஆண்டில் கடனாளிகள் கணக்கிற்கு ரூபா. 3,934,393 ஆன தொகை கடன் நிலுவையாக தீர்க்கப்பட்டு நிகர நிலுவையை கடனாளி நிலுவையாக ரூபா. 210,678,419 ஆன தொகை நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.*

*(iv) விநியோகஸ்தர்களின் கடனாளி நிலுவையாக ரூபா. 47,007,961 ஆன தொகையைக் கொண்ட நிலுவையினுள் ரூபா. 33,387,747 ஆன தொகை கடன் மீதி தீர்க்கப்பட்டதால் அந்த பெறுமானத்தில் இருந்து விநியோகஸ்தர்களின் கடனாளி நிலுவை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.*

*(ஆ) 2021 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு கம்பெனிக்குச் சொந்தமான ரூபா. 21,451,693,754 ஆன தொகை மொத்த சொத்தாகவும் ரூபா. 20,436,070,475 ஆன தொகை மொத்த கடன் பொறுப்பாகவும் ரூபா. 1,015,623,279 ஆன தொகை உரிமை நிலுவையாகவும் நிலவுவதோடு கணக்காய்விற்காக நிதிக் கூற்றினைச் சமர்ப்பிக்கும் போது அதற்கு உரித்தான ஒவ்வொரு தொழிற்சாலைக்குமான பேரேட்டுக் கணக்கு, அட்டவணை, கணக்கு நாளேடு மற்றும் ஒவ்வொரு தொழிற்சாலைக்குமாக தயாரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதோடு அதனை இருப்பு நிலைச் சோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.*

*(இ) இலங்கை நிதி அறிக்கையிடல் தர நியம இலக்கம் 09 இன் 5.5.15 ஆம் பந்தியின் படி வணிக கடனாளி நிலுவையான ரூபா. 563,411,473 ஆன தொகைக்கு பிற்கால சேதங்களை கண்டறிந்து அளவீடு செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு முறை (Expected credit loss method) பயன்படுத்தப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு கணக்கிடப்படவில்லை என்பதால் மீளாய்வு ஆண்டில் வணிக மற்றும் பிற கடனாளிகள் மிகையாக அல்லது குறைவாக கணக்கிடப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.*

*(ஈ) இலங்கையின் கணக்கீட்டுத் தர நியம இலக்கம் 16 இன் 50 மற்றும் 51 ஆம் பந்திகளின் படி பயன்பாட்டிற்கு கொள்ளப்பட்ட சொத்துகளின் ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு உற்பத்தித்திறன் கொண்ட ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் மதிப்பீட்டு வித்தியாசத்தை கணக்குப்பதிவிடல் வேண்டும். எனினும், மொத்தமாக ரூபா. 596,279,628 ஆன தொகை முழுமையாக தேய்மானம் அடைந்திருந்த நிலையான 7131 சொத்துக்கள் கம்பெனியினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் உற்பத்தித்திறன் மிக்க ஆயுட்காலம் தொடர்பிலான மீளாய்வும், அது தொடர்பிலும் எந்தவொறு விடயமும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.*

*(உ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 21 இன் படி ஏதேனும் ஒரு கொடுப்பனவு செலுத்தப்படும் திகதியில் குறித்த அந்நியச் செலாவணி விகிதத்திற்கு ஏற்ப பெறுமதியை மாற்ற வேண்டியிருந்தாலும், படல்கம புதிய பாற் தொழிற்சாலையை நிர்மானப் பணிகளுக்கு மற்றும் இயந்திர உபகரண உதிரிப் பாகங்களை கொண்டு வருவதற்கும் மீளாய்வு ஆண்டினுள் செலவிடப்பட்ட யூரோ 525,070.28 ஆன பெறுமதி ரூபா. 113,502,752 ஆன தொகையாக இருந்தாலும், கம்பெனியின் நிதிக் கூற்று குறிப்பு இலக்கம் 3 இன் படி ரூபா. 116,280,515 ஆன தொகை என கணக்கிடப்பட்டுள்ளதால் ரூபா. 2,777,763 ஆன தொகை மேலதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது.*

*(ஊ) கம்பெனியின் நிதி நிலைக் கூற்றின் குறிப்பிலக்கம் 02 இன் படி மீளாய்வு ஆண்டின் தேய்மான அளவாக ரூபா. 517,715,524 ஆன தொகை காட்டப்பட்டிருந்தாலும், கம்பெனியின் இறுதி நிதிக் கூற்றின் விவரமான வருமானக் கூற்றில் விற்பனைச் செலவின் கீழ் தொழிற்சாலை தேய்மானமாக ரூபா. 458,316,520 ஆன தொகை மற்றும் நிர்வாக மற்றும் அபிவிருத்தி செலவின் கீழ் ரூபா. 38,629,545 ஆன தொகை என ஒட்டுமொத்த தேய்மானமாக ரூபா. 496,946,065 ஆன தொகையாக காட்டப்பட்டிருப்பதன் காரணமாக ஆண்டின் தேய்மானம் எனக் குறிப்பிடும் போது ரூபா. 20,769,459 ஆன தொகையில் வேறுபாடு இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.*

*(எ) கம்பெனியின் மீளாய்வு ஆண்டில் மோட்டார் வாகனங்களின் ஆரம்ப நிலுவையாக ரூபா. 147,942,408 ஆன தொகையாக காட்டப்பட்டிருந்தாலும், அது கடந்த வருடத்தின் நிதிக் கூற்றில் குறிப்பிலக்கம் 02 இல் மோட்டார் வாகனங்களின் இறுதி நிலுவையாக ரூபா. 151,142,408 ஆன தொகையாகக் காட்டப்பட்டுள்ளதனால், மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் மோட்டார் வாகன நிலுவையாக ரூபா. 3,200,000 ஆன தொகை குறைவாக பதியப்பட்டிருந்தது. மேலும், மோட்டார் வாகனங்களின் திரட்டிய தேய்மானத்தைக் குறிப்பிடும் போது கடந்த ஆண்டு இறுதியில் அதன் நிலுவை ரூபா. 159,593,667 ஆன தொகையாகவும் மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப திரட்டிய நிலுவையாக ரூபா. 156,393,667 ஆன தொகையாகவும் காட்டப்பட்டுள்ளதான் காரணமாக ரூபா. 3,196,000 ஆன தொகை குறைவாக பதியப்பட்டுள்ளது.*

*(ஏ) மோட்டார் வாகனங்கள் தொடர்பில் மீளாய்வு ஆண்டில் ஆரம்ப நிகர நிலுவையாக ரூபா. 8,451,259 ஆன தொகை எதிர்மறை நிலுவையாக காணப்பட்டுள்ள போது மீளாய்வு ஆண்டினுள் ரூபா. 2,431,269 ஆன தொகை ஆண்டின் தேய்மானமாக கணக்கில் பதியப்பட்டுள்ளதால் ஆண்டிறுதியில் நிகர நிலுவையாக ரூபா. 21,195,179 ஆன தொகை எதிர்மறை நிலுவையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.*

*(ஐ) மிளாய்வு ஆண்டினுள் ரூபா. 11,000,160 ஆன தொகை செலவாக மோட்டார் வாகனங்களுக்கும், ரூபா. 20,614 ஆன தொகை செலவு, ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களுக்கும் மற்றும் ரூபா. 28,000 ஆன தொகை செலவு அலுவலக உபகரணங்களுக்கான செலவிலிருந்து அகற்றப்பட்டுள்ளதோடு, அகற்றுடன் தொடர்புடைய எழுத்தாவண ஆதாரங்கள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக குறித்த பெறுமதிகளின் துல்லியத்தன்மையை பரீட்சித்துப் பார்ப்பதற்கு முடியாதுள்ளது.*

*(ஒ) கம்பெனியின் நிதி நிலைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் அமைந்த குறிப்பு இலக்கம் 03 இல் மீளாய்வு ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற வேலையின் கீழ் பொலன்னறுவை பாற் தொழிற்சாலையின் நடைபெற்றுவரும் வேலைகளுக்கு வருட ஆரம்ப நிலுவையாக ரூபா. 16,169,330 ஆன தொகையும், மீளாய்வு ஆண்டில் ஏற்கப்பட்ட செலவாக ரூபா. 7,543,255 ஆன தொகையும் பதியப்பட்டிருந்தும், ஆனால் பொலன்னறுவை பாற் தொழிற்சாலையின் நிதிக் கூற்றின் செயற்பாட்டில் உள்ள வேலையின் படி வருட ஆரம்ப நிலுவை மற்றும் ஏற்கப்பட்ட செலவாக முறையே ரூபா. 11,822,998 ஆன தொகையும், ரூபா. 20,169,261 ஆன தொகையுமாக காட்டப்பட்டமை காரணமாக அந்நிலுவைகள் ஒழுங்குமுறையே ரூபா. 4,346,332 ஆன தொகை மற்றும் ரூபா. 12,626,006 ஆன தொகையில் வித்தியாசம் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் கம்பெனியின் நிதி நிலைக் கூற்றில் பொலன்னறுவை பாற் தொழிற்சாலையின் கீழ் மீளாய்வு ஆண்டில் ஏதேனும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை அளவினை மூலதனமாக்கி இருக்கவில்லை என்பதோடு, பொலன்னறுவை பாற் தொழிற்சாலையின் நிதி கூற்றின் படி ரூபா. 12,626,006 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டுள்ளது.*

*(ஓ) படல்கம புதிய பாற் தொழிற்சாலையின் நிர்மானப் பணிகளுக்காகவும், அதனுடன் தொடர்புடைய இயந்திர உபகரணங்களின் உதிரிப் பாகங்களை கொண்டு வருவதற்கான திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நூற்றுக்கு 30 வீதமான முற்பணத்தில் மீளாய்வு ஆண்டில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு உரித்தான முற்பணமாக ரூபா. 28,223,096 ஆன தொகையும் ரூபா. 28,528,279 ஆன தொகையும் மற்றும் நூற்றுக்கு 10 இனைத் பிடித்து வைத்துக் கொள்ளும் நிதியாக ஒழுங்குமுறையே ரூபா. 9,407,698 ஆன தொகையும், ரூபா. 9,509,426 ஆன தொகையுமாக நடைபெற்று வருகின்ற வேலைக் கணக்கிற்கு மாற்ற வேண்டி இருந்தும் கம்பெனி அவ்வாறு செய்யாது வருட இறுதி செலாவணி விகிதாசரத்தின் படி அக்கொடுப்பனவை செலுத்துவதற்கு உரித்தான முற்பணத் தொகையாக ஒழுங்குமுறையே ரூபா. 31,585,570 ஆன தொகை மற்றும் ரூபா. 28,365,543 ஆன தொகை மற்றும் நூற்றுக்கு 10 இனை பிடித்துக் கொள்ளும் பணமாக ஒழுங்குமுறையே ரூபா. 10,528,523 ஆன தொகையும் ரூபா. 9,455,181 ஆன தொகைக்கு நடைபெற்றுச் செல்கின்ற வேலைக் கணக்கிற்கு*

*மாற்றப்பட்டுள்ளதால் 2020 ஆம் ஆண்டிற்கான முற்பணத் தொகை மற்றும் நூற்றுக்கு 10 வீதத்தினை பிடித்துவைத்துள்ள தொகையாக ஒழுங்குமுறையே ரூபா. 3,362,474 ஆன தொகை மற்றும் ரூபா. 1,120,825 ஆன தொகை அதிகமாகவும் 2021 ஆம் ஆண்டிற்கான முற்பணத் தொகை மற்றும் நூற்றுக்கு 10 வீதத்தினை பிடித்து வைத்துக் கொள்வதற்கான தொகையாக முறையே ரூபா. 162,736 ஆன தொகையும் ரூபா. 54,245 ஆன தொகையும் குறைவாக மாற்றப்பட்டிருந்தது.*

*(ஔ) படல்கம புதிய பாற் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளுக்காகவும், அதனுடன் தொடர்புடைய இயந்திர உபகரணங்களின் உதிரிப் பாகங்களையும் கொண்டு வருவதற்காக 2020 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்டுள்ள ஆனால் கணக்கில் பதியப்படாத மொத்தம் ரூபா. 94,076,984 ஆன தொகை கம்பெனியின் மீளாய்வு ஆண்டின் ஆரம்ப நிலுவையில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும் என்றாலும் அந்நடவடிக்கையை மேற்கொள்ளாது மீளாய்வு ஆண்டின் செலவாக கணக்கில் பதியப்பட்டுள்ளது.*

*(க) மீளாய்வு ஆண்டில் படல்கம புதிய பாற் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளின் ஆலோசனைச் சேவைக்காக ரூபா. 2,115,000 ஆன தொகை உள்நாட்டு நிதியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளதோடு, அச்செலவுகளும் உள்ளடங்கலாக தொழிற்சாலைக்கான ரூபா. 27,889,081 ஆன தொகை கம்பெனியில் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளதோடு அச்செலவுகள் இடமபெற்று வரும் வேலையின் கீழ் கணக்குப் பதியப்படல் வேண்டும் என்றாலும் மீளாய்வு ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவளிக்கப்பட்டுள்ளது.*

*(ங) படல்கம தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக டெஸ்மி திட்டத்திற்கு செலுத்தப்பட்டிருந்த யூரோ 19,180,692.30 ஆன ஆரம்ப முற்பணத் தொகையில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள யூரோ 363,076.24 ஆன தொகை இலங்கை ரூபாய் பெறுமதியில் ரூபா. 81,401,693 ஆன தொகையாக இருக்க வேண்டும் என்பதால், கம்பெனியின் நிதிக் கூற்றில் அது ரூபா. 83,777,083 ஆன தொகையாக காட்டப்பட்டிருப்பதன் காரணமாக ரூபா. 2,375,390 ஆன தொகை மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. அதற்கு உரித்தான சரியானதும் துல்லியமானதுமான செலவானி பரிமாற்ற நட்டம் ரூபா. 999,614 ஆன தொகையாக இருத்தல் வேண்டும் என்றாலும், கம்பெனியின் நிதிக் கூற்றில் அப்பெறுமதி ரூபா. 4,575,513 ஆன தொகை இலாபமாக காட்டப்பட்டிருப்பதன் காரணமாக அப்பெறுமதி ரூபா. 5,575,127 ஆன தொகையில் மிகையாக காணப்படுவதோடு அப்பெறுமதி கம்பெனியின் விவரமான வருமானக் கூற்றில் பிற செயற்பாட்டு வருமானத்தில் கணக்குப் பதியப்பட வேண்டும் என்றாலும், கம்பெனியினால் அது திறைசேரியின் கடன் நிலுவையினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.*

*(ச) டெஸ்மி திட்டத்திற்குரிய ரூபா. 56,751,375 ஆன தொகை மீளாய்வு ஆண்டினுள் நீண்ட கால முற்பண ஆரம்ப நிலுவையாக நடைபெற்று வருகின்ற வேலைக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும் என்றாலும் ரூபா. 59,951,113 ஆன தொகை மாற்றப்பட்டதன் காரணமாக ரூபா. 3,199,738 ஆன தொகை கூடுதலாக மாற்றப்பட்டிருந்தது.*

*(ஞ) நிதிக் கூற்றினுள் நடைபெற்று வருகின்ற வேலையின் கீழ் மீளாய்வு ஆண்டினுள் ஏற்கப்பட்ட பொலன்னறுவை தொழிற்சாலையின் குளிரூட்டி அறையொன்றினை நிர்மாணிப்பதற்கான செலவு செய்யப்பட்ட ரூபா. 7,543,255 ஆன தொகை மற்றும் படல்கம பாற் தொழிற்சாலையில் மூடிய நீர்த்தொட்டியொன்றினை நிர்மாணிப்பதற்கான செலவாக ரூபா. 13,280,786 ஆன தொகைக்கு உரித்தான எழுத்து மூல சாட்சியங்கள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக குறித்த பெறுமதிகளின் துல்லியத்தன்மையை சோதனையிட்டுப் பார்ப்பதற்கு முடியாமல் உள்ளது.*

*(ட) டொலர் வைப்புக்கான கடன் தீர்வு மீளாய்வு ஆண்டின் ஜூலை மாதம் 06 ஆந் திகதிக்கு டொலர் நிலையான வைப்பிற்காக கிடைக்கப்பெற்ற வட்டி ரூபா. 19,092,300 ஆன தொகை மற்றும் மீளாய்வு ஆண்டில் மீதமுள்ள 179 நாட்களுக்கும் கிடைக்கப்பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா. 25,452,720 ஆன தொகையாக வருடத்திற்கு உரித்தான வட்டி வருமானம் ரூபா. 44,545,020 ஆன தொகையாக இருத்தல் வேண்டும் ஆனால், ரூபா. 46,452,198 ஆன தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூபா. 1,907,178 ஆன தொகையில் வித்தியாசம் காணப்படுகின்றது.*

*(ண) கம்பெனியின் வணிக மற்றும் பிற செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளின் கீழ் அமைந்த கடன் வழங்குநர் நிலுவைக்கு உரித்தான கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி பிரதான அலுவலகத்தின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வணிக கடன் வழங்குநர் நிலுவைக் கணக்கில் பதியப்பட்டுள்ள ரூபா. 360,173,996 ஆன தொகையாக இருந்தாலும் கணக்காய்வில்*

*சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான அலுவலகத்தின் கடன் வழங்குநர் நிலுவைப் பட்டியலில் அதன் நிலுவை ரூபா. 349,759,934 ஆன தொகையாக காணப்படுவதனால் அந்நிலுவையில் ரூபா. 10,414,062 ஆன தொகை வித்தியாசமான பெறுமானத்தை காட்டுகின்றது.*

*(த) கம்பெனியின் நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் வணிக மற்றும் பிற கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டிய நிலுவையின் கீழான குறிப்பிலக்கம் 17 இல் உள்ளடங்கியுள்ள பிற கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிலுவைக்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி பிரதான அலுவலகத்தில் உள்ளடக்கப்பட முடியுமான பொருளாதார சேவைக் கட்டண நிலுவை ரூபா. 52,893,933 ஆன தொகையாக காட்டப்பட்டுள்ளதோடு, ஆனால் கம்பெனிக்குச் சொந்தமான பிரதான அலுவலகத்தின் நிதிக் கூற்றில் பிற கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டிய அட்டவணையினுள் அந்நிலுவை ரூபா. 203,476,482 ஆன தொகை நிலுவையாக காட்டப்பட்டிருப்பதன் காரணமாக, வித்தியாசம் எனக் காட்டப்பட்டுள்ளது. அட்டவணையின் படி பிரதான அலுவலகத்தின் அந்நிலுவையில் ரூபா. 256,370,41 ஆன தொகையில் வித்தியாசம் காணப்பட்டுள்ளது. அட்டவணையின் படி, பிரதான அலுவலகத்தின் கடன் வழங்குநர் நிலுவையினுள் சுட்டிக்காட்டப்பட்டிராத ஆனால் பிரதான அலுவலகத்தின் நிதிக் கூற்றில் பிற கடன் வழங்குநர் அட்டவணையில் ரூபா. 281,192,118 ஆன தொகையை நிகர நிலுவையாக காட்டப்பட்டிருந்தது.*

*(ந) கம்பெனியின் நிதி நிலைக் கூற்றில் வணிக மற்றும் பிற கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலுவையில் உள்ளடங்கியுள்ள பொலன்னறுவை தொழிற்சாலையின் ரூபா. 45,039,718 ஆன தொகை நிலுவையும், திகன தொழிற்சாலையின் ரூபா. 11,517,959 ஆன தொகை நிலுவையும் மற்றும் பொல்கஹவெல கால்நடை உணவு உற்பத்திப் பிரிவின் ரூபா. 1,229,974 ஆன தொகை நிலுவைகளாக கடன் வழங்குநர் நிலுவைப் பட்டியலொன்றும், கடன் வழங்குநர் காலப் பகுப்பாய்வென்றும் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.*

*(ப) விவரமான வருமானக் கூற்றில் பொருளாதார சேவைக்கான வரியை (ESC) பதிவழிப்புச் செய்வதற்காக மீளாய்வு ஆண்டில் ரூபா. 59,232,476 ஆன தொகை எனக் காட்டப்பட்டுள்ளதோடு, அத்தொகையை காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத விடயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.*

*(ம) விவரமான வருமானக் கூற்றின் பயன்பாட்டிற்கு உரிமையுள்ள சொத்துப் பயன்பாட்டிற்கு ரூபா. 13,739,172 ஆன தொகை வரை இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா. 13,051,662 ஆன தொகையாக காட்டப்பட்டுள்ளதால் ரூபா. 687,570 ஆன தொகையில் வித்தியாசத்தை காட்டுகின்றது.*

*(ய) கணக்காய்வில் கணக்கிடும் போது மிளாய்வு ஆண்டில் ஒத்திவைக்கப்பட்ட குத்தகைச் சொத்தாக ரூபா. 284,390,275 ஆன தொகையாக இருந்தாலும், நிதிக் கூற்றின் குறிப்பிலக்கம் 13 இன் படி ஒத்திவைக்கப்பட்ட குத்தகை சொத்தாக ரூபா. 237,988,790 ஆன தொகையாக காட்டப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா. 46,411,485 ஆன தொகையில் மாற்றம் காணப்படுகின்றது.*

*(ர) பொதுத் திறைசேரியினால் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்த தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் திட்டம் தொடர்பில் 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிலவுகின்ற ரூபா. 8,169,034,183 ஆன தொகை துணை கடன் நிலுவை அரச முதலீடாக மாற்றுவதற்கும் அத்திகதிக்கு நிலவுகின்ற மீதமான வட்டியை பதிவளிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலும் அக்கடன் தொகையை முதலீடாக கணக்கில் பதிவதற்கும் குறித்த வட்டியை பதிவளிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கம்பெனியின் உரிமை நிலுவையும் நீண்ட கால கடன் பொறுப்பு நிலுவையும் அப்பெறுமதியில் ஒழுங்குமுறையே குறைவாகவும் , கூடுதலாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.*

*(ல) பொலன்னறுவை தொழிற்சாலையின் ரூபா. 54,198,075 ஆன தொகை மொத்த கடனாளி நிலுவையாக ரூபா. 50,598,700 ஆன தொகை அதாவது நூற்றுக்கு 93 வீதமானளவு கம்பெனியின் சாதாரண கடன் காலமான ஒரு மாத காலத்தினை விஞ்சிய 06 மாதங்களுக்கு மேலான கடனாளி நிலுவையாக இருந்துள்ளதோடு அதில் ரூபா. 534,140 ஆன தொகை 2018 ஆம் ஆண்டிலிருந்தும் ரூபா. 40,804,344 ஆன தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்தும் கிடைக்கப்பெற்ற நிலுவையாகும். அந்த நிலுவையை அறவிட்டுக் கொள்வது சந்தேகத்திற்கிடமானதாக இருந்துள்ளதோடு அதற்கான சேதங்களை சீராக்கம் செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.*

*(வ) நிதிக் கூற்றின் படி இலவசமாக வழங்கப்பட்டுள்ள மற்றும் பதிவளிப்புச் செய்யப்பட்டுள்ள இருப்பின் பெறுமதி ரூபா. 23,379,775 ஆன தொகையாக இருந்தாலும், கணக்காய்வின் போது சமரப்பிக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி அந்நிலுவை ரூபா. 46,113,191 ஆன தொகையாகும் என்பதால் ரூபா. 22,733,416 ஆன தொகை பெறுமதியில் வித்தியாசம் நிலவுகின்றன.*

*(மு) மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுடன் அதற்கு உரித்தான அட்டவணை மற்றும் தொழிற்சாலை நிதிக் கூற்றினைப் பரீட்சித்துப் பார்க்கும் போது பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.*

| விபரம் | அட்டவணை மற்றும் தொழிற்சாலையின் நிதிக் கூற்றின் படி நிலுவை (ரூபா.) | நிதிக் கூற்றின் படி நிலுவை (ரூபா.) | வித்தியாசம் (ரூபா.) |
|---|---|---|---|
| சொத்து, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | | | |
| - செலவு | 9,594,216,873 | 9,573,173,069 | 21,043,804 |
| - ஆண்டின் தேய்மானம் | 530,767,186 | 496,946,065 | 33,821,121 |
| சொத்து, இயந்திராதிகள் மற்றும் உபகரணப் பொருட்கள் 08இன் திரட்டிய தேய்மானம் | 3,893,681,904 | 3,987,020,435 | 7,924,615 |
| பயன்படுத்தியதற்கான உரிமையுள்ள சொத்துக்கள் | | | |
| - செலவு | 76,264,089 | 97,307,676 | 21,043,587 |
| - திரட்டிய தேய்மானம் | 41,861,765 | 38,611,204 | 3,250,561 |
| - தேறிய பெறுமானம் | 34,402,324 | 58,696,472 | 24,294,148 |
| மேலதிகப்பற்று வட்டிச் செலவு | 19,905,504 | 25,256,078 | 5,350,574 |
| விற்பனைச் செலவு | 10,854,516,132 | 11,292,970,296 | 438,454,164 |

*மேற்படி விளக்கப்பட்டுள்ளவாறு, நிதி நிலைக் கூற்றின், விவரமான வருமானக் கூற்றின், உரிமை மாற்றக் கூற்றின் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டள்ள போதுமானளவு பொருட்கள் மாற்றீட்டு முறைமை ஊடாக உறுதிப்படுத்துவதற்கு மற்றும் சான்றுப்படுத்துவதற்கு என்னால் முடியாதுள்ளது. அதன் காரணமாக, நிதி நிலைக் கூற்று, விவரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுகளில் தயாரிக்கப்பட்டுள்ள பெறுமானம் அல்லது பொருட்களின் அறிக்கையிடப்பட்டுள்ள அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கங்களைச் செய்வதற்கு தேவையாக உள்ளதா என்பதனை என்னால் உறுதியாக கூற முடியாமல் உள்ளது.*

### *1.3* **நிதிநிலைக் கூற்றுகள் தொடர்பான முகாமையினதும் நிர்வாகத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

*இந் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் முன்னளிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான போதுமானளவு பிறழ் கூற்றேதும் இல்லாத நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும்.*

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, கம்பெனியினால் நிதியினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியுமான வகையில் தீர்மானங்களை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவம் கம்பெனியை முடிவுறுத்த தீர்மானங்கள் எடுக்குமாயின் அல்லது பிற பதிலீட்டு முறைமைகள் இல்லாதிருந்தாலும் அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர தொடர்ச்சியான இருப்புக்குரிய காரணிகளின் அடிப்படையில் கணக்குப் பதிவிடல் மற்றும் கம்பெனியின் தொடர்ச்சியான இருப்புக்குரிய விடயங்களையும் தெளிவுபடுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பெனியின் நிதிக் கூற்றுக்களை அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பான தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கேற்ப, கம்பெனியின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவுகள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவர வேண்டும்.

**1.4நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப நடாத்தப்படும் கணக்காய்வினை மையமாகக் கொண்டு கம்பெனியின் நிதிநிலை அறிக்கைகளை தயார்படுத்துவது தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்புக்கான அபிப்பிராயம் எனும் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு போதுமானளவு மற்றும் தகுந்த கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியாமல் போனது.

2. **ஏனைய சட்டங்கள், விதிகளின் அவசியப்பாடு தொடர்பான அறிக்கை**

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கத்தடைய கம்பெனிச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடு தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பெனிச் சட்டத்தின் 163 (2) (ஈ) பிரிவின் மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க கணக்காய்விற்கு அவசியப்படும் சகல தகவல்கள், தெளிவுபடுத்தல்களை என்னால் பெற்றுக்கொள்ள முடியாது போனதோடு, எனது பரீட்சிப்பின் படி கண்டறியப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கையை கம்பெனி பேணிச் சென்றுள்ளதாக உறுதிசெய்ய என்னால் முடியாதுள்ளது.

2.1.2 இந்த அறிக்கையில் அபிப்பிராய மறுப்பினை அடிப்படையாகக் கொண்ட பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர, கம்பெனியின் நிதிக் கூற்று, 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாகவும்,

2.1.3 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii)ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்பாட்டுக்கு ஏற்ப கம்பெனியின் நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது எனவும்,

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொண்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் போதுமானளவு விடயங்களுக்கு கட்டுப்படுத்தலின் படி, பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கு விசேட விடயங்கள் எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி கம்பெனியின் ஆளுகைச் சபையின் எவரேனும் ஒரு உறுப்பினருக்கு கம்பெனி சம்பந்தப்பட்டு ஏதேனும் ஒரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு விதத்திலோ பொதுவான வர்த்தக நிலையிலிருந்து புறம்பான தொடர்பொன்று இருப்பதாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி பின்வரும் அவதானங்கள் தவிர்ந்த ஏதேனும் உரித்துடைய எழுத்து மூலச் சட்டத்திற்கு அல்லது கம்பெனியின் ஆளுகைச் சபையினல் வெளியிடப்பட்டுள்ள பிற பொதுவான மற்றும் குறிப்பான கட்டளைகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளதாகவும்.

| சட்டங்கள்மற்றும்ஒழுங்குவிதிக்குறிப்பு | விபரம் |
|---|---|
| (அ) இலக்கம் பிஈடீ/12, இனைக் கொண்ட 2003 ஜூன் 02 ஆந் திகதி அரசாங்க தொழில்முயற்சிச் சுற்றறிக்கை | |
| (i) 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்று மற்றும் வரைவுகள் வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றில் முன்வைக்கப்பட்டிருந்தது 2024 மார்ச் மாதம் 11 ஆந் திகதியாகும். அதன்படி 710 நாட்கள் தாமதமடைந்திருந்தது. |
| (ii) 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றுகை அறிக்கை / முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும், ஆனால் 2021 ஆம் ஆண்டில் அவ்வாறு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 5.1.2 ஆம் பிரிவு | வர்த்தகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவனக் கட்டமைப்பு மற்றும் செயலாற்றுகை சுட்டி ஆகிய விடயங்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு தயாரிக்கப்பட்டிருந்த வர்த்தகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 5(2) ஆம் பிரிவு | தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வேண்டிய வருடாந்த வரவுசெலவுத் திட்ட ஆவணத்தில் நிதி நிலை |

| | |
|---|---|
| | அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் வருடத்திற்கான கடன் திருப்பிச் செலுத்தும் திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி கம்பெனியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் ஒத்திசைவற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி, பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர கம்பெனியின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதி வாய்ந்ததாகவும் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்கியதாக திட்டமிட்டு பயன்படுத்தவில்லை எனவும்.

(அ) படல்கம புதிய பாற் தொழிற்சலையை நிர்மாணிப்பதற்கு உரித்தான மில்கோ கம்பெனி மற்றும் வெளிநாட்டு தனியார் ஒப்பந்த நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தினுள் யூரோ. 25,215,692 ஆன தொகையில் நிர்மாணிப்பதற்காக அளவீட்டுப் பத்திரத்தை தயாரித்திருக்கவில்லை என்பதால் குறித்த நிர்மாணப் பணிகள் தொடர்பான கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது குறித்த கொடுப்பனவுகளுக்கு துல்லியத்தன்மை மற்றும் நிர்மாணப் பணிகளின் தர நியமங்கள் தொடர்பான சிக்கல்கள் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) படல்கம பால் உற்பத்தித் தொழிற்சாலைத் திட்டத்திற்காக ரூபா. 9,718,217,432 (யூரோ 63,935,641) ஆன ஒப்பந்தப் பெறுமதிக்கு 2016 ஆம் ஆண்டு வெளிநாட்டு ஒப்பந்தக் கம்பெனியொன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு,அத்திட்டம் 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவிருந்தது. 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ரூபா. 11,868,506,855 ஆன தொகை செலவிடப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. படல்கம பாற் தொழிற்சாலையை நிறுவுவதற்கான ஒப்பந்த நடவடிக்கைகள் அரச பெறுகை வழிகாட்டலுக்கு அப்பாற்பட்டு வெளிநாட்டு நிர்மாணக் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த திட்டம் விலை மனுக் கோரலின்றிய திட்டமாக (Unsolicited Project) நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு, அதற்குரிய பெறுகை வழிகாட்டல் மேலதிக 23 இன் 3 ஆம் பிரிவின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விசேட தொழில்நுட்ப அறிவுடன் கூடிய ஒப்பந்தக்காரர்களை கண்டறிய முடியாத திட்டங்களுக்கு மாத்திரம் இவ்வாறு Unsolicited திட்டமாக நடைமுறைப்படுத்த முடியும் என்றும், ஆனால் இவ்வாறானதொரு தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு சர்வதேச விலை மனுக் கோரல் மூலம் ஒப்பந்தக்காரர் ஒருவரை கண்டு பிடிப்பதற்கான இயலுமை இருப்பதனால், நிர்மாணத்திற்கான செலவிற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ரூபா. 9,718,217,432 (யூரோ 63,935,641) ஆன தொகையை பெற்றுக்கொள்வதற்கு இருந்த குறைந்த பட்ச விலை மனுக் கோரலை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

(இ) பெறுகை வழிகாட்டல் குறிப்பின் துணை 28 ( Supplyment 28) இன் படி ஏதேனும் ஒரு பெறுகை நடவடிக்கையில் முழுமையாக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா. 10 மில்லியனுக்கும் 20 மில்லியனுக்கும் இடைப்பட்டதான பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டிருப்பின் அதற்குரிய நிரல் அமைச்சின் குறித்த பெறுகை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்றாலும் திகன பாற் தொழிற்சாலையின் அலுவலக கட்டிடத்தை நிர்மாணப் பணிகளுக்கான மதிப்பிடப்பட்ட செலவு உழைக்கும் போதே செலுத்தப்படும் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அற்றதாக ரூபா. 3,976,320 ஆன தொகை மற்றும் அலுவலக கட்டிடத்தின் கூரையை பொலிதீனினால் மூடுவதற்குரிய மதிப்பிடப்பட்ட செலவு உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும்

*வரி நீங்கலாக ரூபா. 13,453,900 ஆன தொகையாக ஒட்டுமொத்த மதிப்பீடும் ரூபா. 17,430,220 ஆன தொகையாக காணப்பட்ட போதிலும் குறித்த அமைச்சின் அங்கீகாரமின்றி முழுமையான பணியை இரண்டு பகுதிகளாக ரூபா. 10 மில்லியனுக்கு குறைவான நிறுவன மட்டத்திலான அங்கீகாரத்துடன் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி துணை மதிப்பீட்டின் படி குறைந்தபட்சம் 05 விலை மனுக் கோரல்ளாவது மதிப்பிட்டு குறித்த பணியை முழுமையாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு 02 விலை மனுக் கோரல்கள் மாத்திரம் மதிப்பிடப்பட்டு மேற்படி பெறுகை வழங்கப்பட்டிருந்தது. இந்த பணிகளுக்காக மீளாய்வு ஆண்டினுள் ரூபா. 9,962,262 ஆன தொகையும் மீளாய்வு ஆண்டிற்கு முன்னைய இரண்டு வருடங்களில் ரூபா. 19,635,143 ஆன தொகையின் மொத்தம் ரூபா. 29,597,405 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.*

***2.3 பிற விடயங்கள்***

*(அ) செலவு ரூபா. 981,084,381 ஆன தொகை கம்பெனியின் நிலையான சொத்துக்களுக்கு உரித்தான நிலையான சொத்து ஆவணத்தினுள் மீளாய்வு ஆண்டில் தேய்மானம், ஆண்டிறுதித் திகதிக்கு தேறிய மதிப்பு போன்ற பெறுமதியை இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.*

*(ஆ) கம்பெனியின் நிதி நிலையினுள் உள்ளடக்கியுள்ள பிரதான அலுவலக்தின் குத்தகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலுவையினுள் பல ஆண்டுகளாக நிலவி வருகின்ற ரூபா. 8,425,296 ஆன தொகை வருமான வரி அபராதத் தொகை ஆகியவற்றை ஒதுக்கீடு செய்யும் நிலுவை உள்ளடக்கி இருந்துள்ளதோடு, அது மீளாய்வு ஆண்டின் இறுதியில் கூட தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(இ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரதான அலுவலகத்தின் கடன் வழங்குநர் காலப் பகுப்பாய்வின் படி 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி நிலவி வருகின்ற ரூபா. 4,548,588 ஆன தொகை கடன் வழங்குநர்களுக்கும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவி வருகின்ற ரூபா. 9,102,469 ஆன தொகையான கடன் வழங்குநர் நிலுவைகள் நிலவி வருகின்றதோடு அந்நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(ஈ) கம்பெனியின் மீளாய்வு ஆண்டின் மொத்த இலாப விகிதாசாரம் நூற்றுக்கு 9.48 உம் மற்றும் தேறிய இலாப விகிதாசாம் நூற்றுக்கு 0.28 ஆன வரை மிகவும் ஆகக் குறைந்தபட்ச பெறுமானத்தைப் பெற்றிருந்ததோடு, அது நிறுவனத்தின் இருப்பின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு பங்கின் உழைப்பு மீளாய்வு ஆண்டில் 1.07 ஆன விகிதமாக காணப்பட்டதோடு அது முன்னைய ஆண்டில் 7.07 ஆன வீதமாக காணப்படுவதால் மீளாய்வு ஆண்டில் ஒரு பங்கின் உழைப்புப் பெறுமானம் நூற்றுக்கு 84.87 ஆன விகிதத்தில் அமைந்திருந்தது.*

*(உ) மீளாய்வு ஆண்டில் கம்பெனியின் ஒட்டுமொத்த விற்பனை வருமானம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 12.35 ஆன விகிதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளதை எடுத்துக்காட்டினாலும், விற்பனை செலவு அதற்கு ஒப்பீட்டளவில் நூற்றுக்கு 16.38 ஆன வீகிதத்தினால் அதிகரித்திருப்பதை அவதானிக்கபட்டுள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது விற்பனைச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆரம்ப செலவு ரூபா. 1,645,267,725 ஆன தொகை மற்றும் தொழிற்சாலையின் பொதுப் பணிகளுக்கான செலவு ரூபா. 21,034,350 ஆன தொகையினால் அதிகரித்துள்ளமை விற்பனை செலவின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலையின் பொதுப் பணிகளுக்கான செலவினை உள்ளடக்கி கட்டிடங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவாக ரூபா. 15,753,091 ஆன தொகை அதிகரித்தல், தொழிற்சாலை பொதுப் பணிக்கான செலவு குறிப்பிடத்தக்க அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.*

*(ஊ) நிதிக் கூற்றின் குறிப்பிலக்கம் 14.2 இல் வட்டியல்லாத கடனின் கீழ் நீண்ட காலத்தில் இருந்து நிலவி வருகின்ற தேசிய பாற் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 2,108,063 ஆன தொகை நிலுவை மீளாய்வு ஆண்டின் இறுதியில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.*

*(எ) மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றில் ரூபா. 5,332,387,240 ஆன தொகையான சொத்து, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் நிகர நிலுவையை எடுத்துக் காட்டினாலும், சொத்து, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்களை உறுதிசெய்தல் கம்பெனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*(ஏ) 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அம்பேவெல புதிய பால் மா இயந்திரக்கூடத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடுஅந்த திகதி முதல் 2018 ஜனவரி மாதம் 18 ஆந் திகதி வரை உற்பத்தி செய்யப்பட்ட பால் மாவுக்கான செலவுகள் ரூபா. 475.2 மில்லியன் பெறுமதியான 720 மெட்ரிக் டொன் அளவு பால் மாவில் ஏற்பட்ட தவறின் காரணமாக , அவற்றை மனிதப் பயன்பாட்டுக்கு உகந்ததல்ல எனவும் கம்பெனியின் இரசாயன ஆய்வுகூ அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பேராதெனிய கன்னொருவ கால்நடை மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் முலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் படி இந்த பால் மாவை தீவனமாகக் கொள்ளும் கால்நடைகளின் உணவின் மூலப்பொருளாக பயன்படுத்துவது உசிதமானமது என 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதி அந்த நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மீண்டும் களஞ்சியசாலைக்கு கொண்டு வரப்பட்ட பால் மா கையிருப்பின் அளவு 666,075 கிலோ கிராமினை 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்ததோடு, அதன் காரணமாக களஞ்சியசாலையின் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நட்டம் தொடர்பாக ஒழுங்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக குறித்த நடவடிக்கைக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து நட்டத்தை அறிவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(ஒ) அம்பேவெல தொழிற்சாலையின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட மொத்த முற்பணப் பெறுமதி ரூபா. 3,632,777 ஆன தொகையாக காணப்பட்டதோடு, அதில் ரூபா. 1,268,432 ஆன தொகை அதாவது நூற்றுக்கு 35 ஆன அளவு 04 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரை நிலுவையாக காணப்பட்டதோடு, அவற்றினை அறவிட்டுக் கொள்வது நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது.*

*(ஓ) கம்பெனியின் உற்பத்திகளை, விற்பனை முகவர்களுக்கு வழங்கும் போது குறித்த முகவருக்கு வழங்கப்பட முடியுமான விலையினை விட அதிக விலைக்கு வழங்கியதன் காரணமாக ரூபா. 26,373,018 ஆன தொகை கொண்ட வருமானம் குறித்த முகவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.*

*(ஔ) கம்பெனியின் 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான அட்டவணையின் படி முன் கொண்டு செல்லப்பட்ட கொடுப்பனவு நிலுவை ரூபா. 5,929,081 ஆன தொகையாக காணப்பட்டதோடு அதில் ரூபா. 5,075,133 ஆன தொகை அதாவது நூற்றுக்கு 86 வீதமும் 05 வருடங்களைத் தாண்டிய நிலுவையாக காணப்பட்டது.*

*(ஐ) படல்கம பாற் தொழிற்சாலையின் கொள்ளலவில் உற்பத்தி நூற்றுக்கு 25 இனை எட்டியிருந்ததோடு ரூபா. 11,868,506,855 ஆன பாற் தயாரிப்பு இயந்திராதிக்கும், திகன பாற் தொழிற்சாலையில் காணப்படுகின்ற ரூபா. 15,445,587 ஆன தொகையுடைய ஐஸ் கிரீம் கோன் நிரப்பும் இயந்திரத்திற்கும், கொழும்பு தொழிற்சாலையில் காணப்படுகின்ற ரூபா. 104,177,779 ஆன தொகையுடைய யோகட் கலவை இயந்திரத்திரம் மற்றும் ரூபா. 2,275,000 ஆன தொகையுடைய 04 இயந்திரங்கும் செயலிழந்து காணப்படுகின்றது.*

*(க) நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து நிலவி வருகின்ற ரூபா. 805,860,149 ஆன தொகை நடைபெற்று வருகின்ற வேலை நிலுவை மீளாய்வு ஆண்டு இறுதியிலும் கூட நிலவி வருவதோடு, அந்நடவடிக்கையை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(ச) திகன தொழிற்சாலையின் ரூபா. 54,718,600 ஆன தொகை முழுமையான கடனாளி நிலுவையில் ரூபா. 6,626,011 ஆன தொகை 05 வருடங்களை விஞ்சிய நிலுவையாக காணப்பட்டுள்ளதோடு, மீளாய்வு ஆண்டிறுதியில் அந்நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*(ஞ) மில்கோ கம்பெனிக்குச் சொந்தமான பிரதான அலுவலகத்தின் கீழ் செயற்பட்டு வருகின்ற பிராந்திய விற்பனை நிலையங்களில் கிடைக்கப்பெறுகின்ற நிலுவைகளில் ரூபா. 2,776,919 ஆன தொகை பற்று நிலுவையாகவும், ரூபா. 951,761 ஆன தொகை கடன் நிலுவையாகவும் மாறுபடாத நிலுவைகளாக ( Non—moving balances) ஆக நிலவி வந்துள்ளதோடு, அந்நிலுவையை அறவிட்டுக் கொள்வது நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது.*

*டப்.பி.சீ. விக்கிரமரத்ன.*
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

| | | 2021 Jan to Dec | 2020 Jan to Dec | 2019 Jan to Dec | 2018 Jan to Dec | 2017 Jan to Dec | 2016 Jan to Dec | 2015 Jan to Dec | 2014 Apr to Dec | 2013/2014 Apr to Mar | 2012/2013 Apr to Mar |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு பெறுபேறுகள்** | | | | | | | | | | | |
| விற்பனை புரள்வு (நிகர) | ரூ. மில். | 12,476.32 | 11,104.71 | 10,313.82 | 11,612.34 | 10,161.30 | 8,679.47 | 7,584.73 | 5,627.62 | 7,019.77 | 6,385.23 |
| மொத்த செலவுகள் | | 12,583.26 | 10,965.40 | 11,256.17 | 12,094.13 | 10,767.49 | 8,352.38 | 7,597.03 | 5,385.66 | 6,879.36 | 6,683.26 |
| மொத்த இலாபம் | ரூ. மில். | 1,183.35 | 1,401.15 | 396.28 | 226.94 | 375.96 | 835.60 | 572.76 | 770.97 | 1,005.69 | 486.43 |
| வரிக்கு முந்திய இலாபம் | ரூ. மில். | 34.33 | 225.76 | (862.71) | (683.45) | (434.93) | 339.33 | 3.82 | 248.16 | 161.11 | (267.47) |
| வருமான வரி செலவுகள் | ரூ. மில். | - | - | - | 201.66 | (171.26) | (12.25) | (16.12) | (6.20) | (20.70) | (30.56) |
| வரிக்கு பிந்திய இலாபம் | ரூ. மில். | 34.33 | 225.76 | (862.71) | (481.79) | (606.19) | 327.08 | (12.30) | 241.96 | 140.41 | (298.02) |
| **ஐந்தொகை** | | | | | | | | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | ரூ. மில். | 319.45 | 319.45 | 319.45 | 319.45 | 319.45 | 319.45 | 319.45 | 319.45 | 319.45 | 319.45 |
| தக்கவைத்த வருவாய்கள் | ரூ. மில். | 333.02 | 28.79 | 145.25 | 785.18 | 1,183.74 | 1,665.98 | 1,257.79 | 1,230.94 | 911.97 | 745.60 |
| கடன் தீர் நிதி | ரூ. மில். | 1.69 | 1.69 | 1.69 | 1.69 | 1.69 | 1.69 | 1.69 | 1.69 | 1.69 | 1.69 |
| ஆலை மற்றும் இயந்திர மேம்படுத்தல் / பதிலீட்டிற்கான ஒதுக்கீடு | ரூ. மில். | 25.00 | 25.00 | 25.00 | 25.00 | 25.00 | 25.00 | 25.00 | 25.00 | 25.00 | 25.00 |
| மீள் மதிப்பீடு ஒதுக்கீடு | ரூ. மில். | 336.45 | 336.45 | 336.45 | 336.45 | 336.46 | 336.46 | 336.46 | 336.46 | 336.46 | 336.46 |
| பங்குதாரர்கள் நிதி | ரூ. மில். | 1,015.62 | 653.81 | 537.35 | 1,467.78 | 1,866.34 | 2,348.58 | 1,940.39 | 1,913.53 | 1,594.57 | 1,428.20 |
| நடப்பு அல்லாத சொத்துக்கள் | ரூ. மில். | 19,120.31 | 19,165.43 | 19,580.81 | 19,471.51 | 17,511.40 | 14,763.67 | 12,261.55 | 8,143.18 | 2,244.07 | 2,123.36 |
| நடப்பு அல்லாத சொத்துக்கள் / (பொறுப்புக் | ரூ. மில். | 1,156.95 | 801.22 | 211.35 | 769.51 | 1,090.41 | 1,670.87 | (243.15) | (143.37) | 431.48 | 445.67 |
| நீண்ட கால (தள்ளிவைக்கப்பட்ட பொறுப்பு | ரூ. மில். | 19,261.64 | 19,312.84 | 19,254.81 | 18,773.24 | 16,735.47 | 14,085.96 | 10,078.01 | 6,086.27 | 1,080.98 | 1,140.84 |
| **விகிதங்கள்** | | | | | | | | | | | |
| ஒரு பங்கிற்கான வருவாய் | ரூ. | 1.07 | 3.65 | (27.01) | (15.08) | (18.98) | 10.24 | (0.39) | 7.57 | 4.40 | (9.33) |
| பங்குதாரர்கள் நிதிக்கான மொத்த சொத்துக்க | தடவைகள் | 21.12 | 32.90 | 41.11 | 15.30 | 11.10 | 7.41 | 7.24 | 5.40 | 2.84 | 2.94 |
| ஒரு பங்கிற்கான நிகர சொத்துக்கள் | ரூ. | 31.79 | 20.47 | 16.82 | 45.95 | 58.42 | 73.52 | 60.74 | 59.90 | 49.92 | 44.71 |
| வீதப் பங்கின் மீதான வருவாய் | ரூ. | 3.38 | 34.53 | (160.55) | (32.82) | (32.48) | 13.93 | (0.63) | 12.64 | 8.81 | (20.87) |
| மொத்த இலாப வீதம் | ரூ. | 9.48 | 12.62 | 3.84 | 1.95 | 3.70 | 9.63 | 7.55 | 13.70 | 14.33 | 7.62 |
| நிகர இலாப வீதம் | ரூ. | 0.28 | 2.03 | (8.36) | (4.15) | (5.97) | 3.77 | (0.16) | 4.30 | 2.00 | (4.67) |
| நடைமுறை சொத்துக்கள் வீதம் | தடவைகள் | 1.99 | 1.52 | 1.09 | 1.35 | 1.52 | 2.73 | 0.88 | 0.94 | 1.23 | 1.27 |
| உடனடி சொத்துக்கள் வீதம் | தடவைகள் | 0.89 | 0.79 | 0.62 | 0.67 | 0.69 | 1.85 | 0.05 | 0.66 | 0.91 | 0.94 |